# சமாதான தூது
## (பைகாமே சுலுஹ்)

உருது மூலம்

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)**
**வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி**

தமிழாக்கம்

**மவ்லவி சுல்தான் முஹ்யுத்தீன்**

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு (வடமண்டலம்)
**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

Copyrights Reserved

**Samaadhaana Theodhu**

Tamil version of
**‘Paigaam-e-Sulah’ (Urdu)**

By Hadhrath Mirza Ghulam Ahmad
(Imaam Mahdi and The Promised Massiah)

Translated By
**Moulavi Sulthan Muhyuddeen**

**Third Edition 2013**

**ISBN : 978 81 7912 282 2**

Published by :

**Tamilnadu Book Publishing Committee (North Zone)**
**AHMADIYYA MUSLIM JAMA’ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamilnadu.
**Website: www.alislam.org\tamil**
**E-mail: amjchennai@yahoo.in**

For:
**NAZAARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya, Qadian

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்நூலை 1908-ஆம் ஆண்டு, தனது மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதினார்கள். இதில் அவர்கள் மிகப்பெரும் சமுதாயங்களாகிய இந்துக்கள், முஸ்லிம்களுக்கு மத்தியில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவேண்டுமென மிகக் கருணையுடன் வேண்டிக் கொண்டார்கள். மேலும் எல்லா மார்க்கங்களின் பெரியோர்களையும், சான்றோர்களையும் கண்ணியப் படுத்தவேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனை ஆகும். மேலும் குறிப்பாக இந்து சகோதரர்கள் முஸ்லிம் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நற்போதனையை இரு சமுதாயத்தினரும் உணர்ந்து ஒருவருக்கொருவர் அன்புடனும் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் நடந்து கொள்ளும் நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக.

-வெளியீட்டாளர்கள்

# சமாதான தூது

வல்லமை படைத்த என் இறைவனே! என் அன்பிற்குரிய வழிகாட்டியே! உண்மையான தூய நல்லடியார்கள் உன்னை அடைகின்ற அந்த வழிதனை எங்களுக்கு காட்டுவாயாக. மேலும் மன இச்சைகள் அல்லது வெறுப்பு, பொறாமை, உலகப் பேராசை ஆகியவற்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்கும் வழிகளிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக.

செவியேற்பவர்களே!

நாம் அனைவரும் இந்துக்களாக இருந்தாலும் முஸ்லிம்களாக இருந்தாலும் நம்மிடையே நிலவும் நூற்றுக்கணக்கான வேறுபாடுகளுக்கு மத்தியிலும் நாம் இவ்வுலகைப் படைத்தவன், மற்றும் அதன் அதிபதியான அந்த இறைவன் மீது நம்பிக்கைக் கொள்வதில் ஒன்றுபட்டிருக்கின்றோம். மேலும் அவ்வாறே நாமனைவரும் மனிதன் என்ற பெயரிலும் ஒன்றுபட்டிருக் கின்றோம். மேலும் அவ்வாறே நாம் அனைவரும் ஒரே நாட்டில் வாழ்பவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஒருவருக்கொருவர் அண்டையர்களாக இருக்கின்றோம். எனவே நமது கடமை என்னவெனில் நாம் தூய உள்ளத்துடனும் நல்ல எண்ணத்துடனும் ஒருவருகொருவர் நண்பர்களாக ஆகி, மார்க்கம் மற்றும் பௌதீக இடுக்கண்களில் ஒருவருக்கொருவர் அனுதாபத்தோடு நடந்து கொள்ள வேண்டும். மேலும் ஒருவர் மற்றவரது உடல் உறுப்புகளாக மாறிவிடுவதைப் போன்று அனுதாபத்தோடு நடந்து கொள்ள வேண்டும்.

எனது தேசத்தினரே !

எந்த மார்க்கத்தில் பொதுவான அனுதாபம் பற்றிய போதனை இல்லையோ அந்த மார்க்கம் ஒரு மார்க்கமே அல்ல. மேலும் எந்த மனிதனிடம் அனுதாபம் என்ற பண்பு இல்லையோ அவன் மனிதே அல்ல. நம் இறைவன் எந்தவொரு சமுதாயத்திடமும் பாரபட்சம் காட்டவில்லை. உதாரணமாக மனிதனின் என்னென்ன ஆற்றல்களும் திறமைகளும் ஆரியர்களின் பழங்கால சமுதாயங்களுக்கு வழங்கப்பட்டனவோ அந்த எல்லா ஆற்றல்களும், திறமைகளும் அரேபியர்கள், பாரசீகர்கள், சிரியாவைச் சேர்ந்தவர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள் அமெரிக்கர்கள் ஆகிய சமுதாயங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இறைவனின் பூமி அனைவருக்கும் தரையாக பயன்படுகிறது. அவனது சூரியன், சந்திரன் மற்றும் பல நட்சத்திரங்களும் அனைவருக்கும் ஒளிதரும் விளக்காக பயன்படுகின்றன. மேலும் பிற தொண்டுகளையும் புரிகின்றன. அவனால் படைக்கப்பட்ட அடிப்படைக் காரணி ஆகிய காற்று, நீர், நெருப்பு, மற்றும் மண் அதே போன்று அவனால் படைக்கப்பட்ட பிற பொருட்களான தானியங்கள், கனிவகைகள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து அனைத்து சமுதாயங்களும் பயன் அடைகின்றன. ஆக, இறைவனின் இந்த பண்புகள், நாமும் மனித இனத்துடன், மனித நேயத்தோடும், நன்னடத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறுகிய மனமுள்ளவர்களாகவும் தைரிய மற்றவர்களாகவும் ஆகிவிடக் கூடாது என்ற பாடத்தையும் புகட்டுகின்றன.

நண்பர்களே ! நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்! ஒருவேளை நம் இரு சமுதாயங்களில் எந்த சமுதாயம் இறை நற்பண்புகளுக்கு கண்ணியம் அளிக்காதோ மேலும் அவனது தூய பண்புகளுக்கெதிராக தமது செயல்பாடுகளை ஆக்குமோ அந்த சமுதாயம் விரைவில் அழிந்து விடும். அது தன்னை மற்றுமின்றி தமது சந்ததியினரையும் அழிவிற்குள்ளாக்கிக் கொள்ளும். இந்த உலகம் தோன்றிய நாள் முதல் எல்லா நாட்டு சான்றோர்களும், இறை நற்பண்புகளை பின்பற்றுவதே மனிதன் நிலைபெற்றிருப்பதற்கு ஒரு வாழ்வாதாரம் ஆகும் என்றும்





மனிதனின் ஆன்மீக மற்றும் பௌதீக வாழ்க்கையானது, அவன் இறைவனது அமைதியின் ஊற்றாக விளங்கும் எல்லா தூய நல்லொழுக்கங்களை பின்பற்றுவதையே சார்ந்திருக்கிறது எனவும் சான்றுரைத்துள்ளனர்.

இறைவன் திருக்குர்ஆனை சூரா ஃபாத்திஹாவிலுள்ள அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்ற வசனத்துடனேயே ஆரம்பித்திருக்கிறான்.

அதாவது முழுமையான மற்றும் தூய பண்புகள் அனைத்தும் அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் இறைவனுக்கே உரியன. ஆலம் (உலகம்) என்ற சொல்லில் பல்வேறு சமுதாயங்கள், பல்வேறு காலகட்டங்கள் மற்றும் பல்வேறு நாடுகள் அடங்கியிருக்கின்றன. மேலும் திருக்குர்ஆன் துவக்கப்பட்ட இந்த வசனத்தின் மூலம், இறைவனின் பொதுவான படைத்து காத்தோம்பும் பண்பையும், அருளையும் தமது சமுதாயத்திற்காக மட்டும் எல்லைக்குட்பட்டதாகக் கொள்ளும் சமுதாயங்களுக்கு மறுப்பு இருக்கிறது. அவர்கள் பிற சமுதாயங்களை, அவர்கள் இறை அடியார்களே அல்ல என்பது போன்று கருதுகின்றனர். இறைவன் அவர்களைப் படைத்து பின்னர் வீணான பொருள்களைப் போன்று எறிந்துவிட்டான் அல்லது அவர்களை மறந்துவிட்டான் அல்லது அவர்கள் இறைவனால், படைக்கப்பட்டவர்களே அல்ல (நவுதுபில்லாஹ்) என்பது போன்று கருதுகின்றனர். உதாரணமாக யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் இப்போது வரையிலான எண்ணம் என்னவெனில், இதுவரை வந்த இறைவனின் நபிமார்கள், ரஸூல்மார்கள் யூத சமுதாயத்திலிருந்து மட்டுமே வந்திருக்கிறார்கள் என்றும், இறைவன் மற்ற சமுதாயங்கள் மீது எந்த அளவுக்கு கோபமடைந்திருந்தான் என்றால் வழிகேடு மற்றும் அறியாமையிலிருப்பதைக் கண்டும் கூட அவர்களை சிறிதும் பொருட்படுத்தவில்லை என்றும் கூறுகின்றார்கள். இவ்வாறே பைபிள் புதிய ஏற்பாட்டிலும் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) 'நான் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேலர் களுக்காக மட்டுமே வந்துள்ளேன்' எனக் கூறியுள்ளார்கள்.

இங்கு நாம் ஒரு வாதத்திற்காக எடுத்துரைக்கிறோம்: (இயேசு) இறைவனாக வாதித்துவிட்டு பிறகு இவ்வாறான ஒரு குறுகிய சிந்தனையுடைய வார்த்தையைக் கூறியிருப்பது மிகவும் ஆச்சரியமான விஷயமாகும். மஸீஹ் (இயேசு) இஸ்ரவேலர் களுக்கு மட்டும் தான் இறைவனாக இருந்தாரா? சமுதாயங்களின் சீர்திருத்தம் மற்றும் நேர்வழி பெறுவதில் எந்த நோக்கமும் இல்லை என்ற சொல் இயேசுவின் வாயிலிருந்து வெளிப்பட்டிருக்கிறதே. அவர் மற்ற சமுதாயங்களுக்கு இறைவன் இல்லையா ?

சுருக்கமாக, யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் கொள்கை என்னவெனில் எல்லா நபிமார்களும் மற்றும் ரஸூல்மார்களும் அவர்களது குடும்பத்திலிருந்தே வருகை தந்திருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய குடும்பத்திலேயே இறைவேதங்கள் இறங்கிக் கொண்டிருந்திருக்கின்றன. பிறகு கிறித்தவர்களின் கொள்கைப்படி வஹி மற்றும் இல்ஹாம் இறங்குவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் முடிவடைந்து விட்டது. மேலும் இறைவனின் இல்ஹாம் மீது முத்திரையிடப்பட்டு விட்டது என்றும் நம்புகின்றனர்.

இதே கொள்கைகளையுடையவர்களாக ஆரியர்களும் காணப்படுகின்றனர். அதாவது யூதர்களும் கிறித்தவர்களும் நபித்துவம் மற்றும் இல்ஹாமை இஸ்ரவேல் சமுதாயம் வரை மட்டுமே எல்லைக்குட்பட்டதாக கொண்டுள்ளார்களோ, எவ்வாறு தாங்கள் இல்ஹாமை பெற்றவர்கள் ஆவோம் என்ற பெருமையுடன் பதில் கொடுக்கின்றனரோ அவ்வாறே மனித குலத்தின் துரதிர்ஷ்ட்டத்தால் மற்றனைத்து சமுதாயங்களும் ஆரியர்களும் இக்கொள்கையையே கொண்டிருக்கின்றனர். அதாவது அவர்களும், இறைவனின் வஹி மற்றும் இல்ஹாம் இறங்குவது ஆரிய சமுதயத்தின் நான்கு சுவர்களுக்கு வெளியே ஒரு போதும் செல்லவில்லை என்ற கொள்கையுடையவர்களாக உள்ளனர். எப்போதும் இதே நாட்டிலிருந்து நான்கு ரிஷிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலும் எப்போதும் வேதமே அடிக்கடி இறங்குகிறது. மேலும் எப்போதும் வேத சமஸ்கிருதமே இந்த இல்ஹாமிற்கென்று குறிப்பாக வைக்கப்பட்டுள்ளது என்ற கொள்கையையே கொண்டிருக்கின்றன.





சுருக்கமாக இந்த இரு சமுதாயங்களும் இறைவனை ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்) ஆகக் கருதவில்லை. இல்லையெனில் இறைவன் ரப்புல் ஆலமீன் (அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்) ஆக அழைக்கப்படும் போது, இஸ்ரவேலர்களின் இறைவனாக மட்டுமோ அல்லது ஆரியர்களின் இறைவனாக மட்டுமோ கருதப்படாதிருக்கும் போது வெளிப்படையாக ஒருதலைபட்சமும் பாரபட்சமும் காணப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துடன் நிரந்தர தொடர்பை அவன் ஏன் உருவாக்கிக் கொள்கின்றான் என்பதற்கு எந்தக் காரணமும் தெரிவதில்லை. ஆகவே இந்த கொள்கைகளை மறுப்பதற்காகவே இறைவன் திருக்குர்ஆனில் “அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்” என்ற வசனத்துடனேயே ஆரம்பிக்கின்றான். மேலும் பல்வேறு இடங்களில் திருக்குர்ஆனில் மிகத் தெளிவான முறையில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது நாட்டில் மட்டுமே இறை தூதர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்து சரியானதல்ல; மாறாக இறைவன் எந்தவொரு சமுதாயத்தையும் எந்தவொரு நாட்டையும் மறக்கவில்லை எனக் கூறியுள்ளான். மேலும் இறைவன் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் அவர்களின் நிலைக்கேற்ப அவர்களுக்கு உலகியல் பரிபாலித்து வந்திருப்பதைப் போன்று அவன் ஒவ்வொரு நாட்டின் மற்றும் ஒவ்வொரு சமுதாயத்தின் ஆன்மீக பரிபாலனத்தின் மூலமாகவும் அருள் பெற செய்திருக்கின்றான் என்பதனைத் திருக்குர்ஆனில் அவன் பல்வேறு உதாரணங்களால் குறிப்பிட்டிருக்கிறான். அவ்வாறே திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகிறான்.

நபி அல்லது ரஸூல் அனுப்பப்படாத எந்தவொரு சமுதாயமும் இல்லை. (திருக்குர்ஆன் 35:25)

ஆகவே எந்த உண்மையான முழுமையான இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டியது ஒவ்வோர் அடியார் மீதும் கடமையோ அவன் அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிப்பவனாவான் என்பது எவ்வித வாதமுமின்றி ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். மேலும் அவனது பரிபாலித்தல் குறிப்பிட்ட எந்தவொரு சமுதாயத்திற்காகவும், எந்தவொரு குறிப்பிட்ட

காலதிற்காகவும் குறிப்பிட்ட நாட்டிற்காகவும் எல்லைக் குட்பட்டதன்று. மாறாக அவன் அனைத்து சமுதாயங்களின் இறைவன் ஆவான். அனைத்து கால கட்டங்களின் 'ரப்' ஆவான். எல்லா இடங்களின் இறைவன் ஆவான். மேலும் அனைத்து நாட்டிற்கும் அவனே இறவைன் ஆவான். மேலும் எல்லா அருட்களின் ஊற்றும் அவனேயாவான், மேலும் ஒவ்வொரு பௌதீக மற்றும் ஆன்மீக ஆற்றல்களும் அவனிடமிருந்தேயாகும். மேலும் அவனிடமிருந்தே அனைத்து உயிரினங்களும் வளர்கின்றன. மேலும் ஒவ்வொரு பொருளின் அரண் அவனே ஆவான். இறைவனின் அருள் பொதுவானதாகும். அது எல்லா சமுதாயங்களையும், எல்லா நாட்டினையும் எல்லா காலங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. இது எந்த சமுதாயத்திற்கும் குற்றங்குறை கூறுவதற்கான வாய்ப்பில்லாமல் போவதற்கேயாகும். மேலும் இறைவன் இன்னன்ன சமுதாயங்களுக்கு அருள்பாலித்திருக்கின்றான். ஆனால் நம் மீது செய்யவில்லை. அல்லது இன்ன சமுதாயத்திற்கு அவன் புறமிருந்து அவர்கள் நேர்வழி பெற வேண்டி வேதம் கிடைத்திருக்கிறது. ஆனால் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அல்லது இன்ன காலத்தில் அவன் தனது வஹி, இல்ஹாம் மற்றும் அற்புதங்களுடன் வெளிப்பட்டான்; ஆனால் நமது காலக்கட்டத்தில் மறைந்திருந்தான் என்றும் கூறாதிருப்பதற் காகவே அவன் அவ்வாறு செய்தான். எனவேதான் அவன் பொதுவான நன்மைகளைச் செய்து இந்த அனைத்து ஆட்சேபணைகளையும் தீர்த்துவிட்டான். மேலும் எந்த சமுதாயத்தையும் எனது பௌதீக மற்றும் மார்க்க அருள்களிலிருந்து விலகாமலும் எந்த காலகட்டத்தையும் துரதிர்ஷ்டசாலியாக ஆக்காமலும் இருக்கும் அளவுக்கு அவன் தனது பரந்த நற்பண்பைக் காட்டியுள்ளான்.

எனவே நமது இறைவனின் நற்பண்புகள் இப்படி இருக்கும் போது நாமும் இப்பண்புகளையே பின்பற்றுவது நமக்குப் பொருத்தமானதாகும். எனவே என் நாட்டு சகோதரர்களே! சமாதானத் தூது என்ற பெயரைக் கொண்ட இச்சிறு நூலை மிக்க மரியாதையுடன் அன்பர்களாகிய உங்கள் முன் சமர்பிக்கின்றேன்.





நீங்கள் இந்த நட்புணர்வுள்ள அன்பளிப்பை உள் நோக்கம் கொண்டதாகவோ சுய நலம் கொண்டதாகவோ கருதாதிருக்கும் பொருட்டு ஆற்றல் மிக்க அந்த இறைவன் அன்பிற்குரிய உங்களின் உள்ளங்களில், தானே உண்மையை உணர்த்துவானாக எனவும் எமது அனுதாபத்தின் இரகசியத்தை உங்கள் உள்ளங்களில் திறக்கச் செய்வானாக எனவும் உண்மையான உள்ளத்துடன் இறைவனிடம் வேண்டுகிறேன்.

அன்பிற்குரியவர்களே! மறுமையின் விஷயங்கள் பெரும்பாலும் பொதுமக்கள் மீது மறைந்தே இருக்கிறது. மேலும் (பௌதீகமான முறையில்) இறப்பதற்கு முன்பே (இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொண்டவர்களாக) இறப்பவர்களுக்குத்தான் மறு உலகத்தின் இரகசியம் திறக்கின்றது. ஆயினும் உலகின் நன்மையையும் தீமையையும் தொலைநோக்குப் பார்வை கொண்ட ஒவ்வொரு மூளையாலும் இனம் கண்டு கொள்ள முடியும்.

ஒற்றுமை எத்தகையது என்றால் வேறெந்த வகையிலும் தீர்க்க முடியாத துன்பங்களும், வேறெந்த திட்டத்தினாலும் தீர்வு காண முடியாத பிரச்சினைகளும் ஒற்றுமையினால் தீர்வு காண முடியும் என்பது எவருக்கும் மறைமுகமானதல்ல. எனவே ஒற்றுமையின் அருட்களிலிருந்து தன்னை விலக்கி வைப்பது அறிவுள்ளவரது செயலன்று. இந்துக்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டில் எப்படிப்பட்ட சமுதாயங்கள் என்றால் அவர்களில் ஒருவருகொருவர், உதாரணமாக இந்துக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்களை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றிவிடுவார்கள் என்பதையோ, அல்லது முஸ்லிம்கள் ஒன்றிணைந்து இந்துக்களை நாடு கடத்திவிடுவார்கள் என்பதையோ நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். இன்னும் சொல்லப் போனால், தற்போது இந்து முஸ்லிம்களின் இணைப்பு பிரிக்க முடியாத ஒன்றாகும். ஒருவர் மீது ஏதும் அழிவு வந்து விட்டால் மற்றவரும் அதில் இணைந்து விடுவார். ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தை கர்வத்துடனோ, பெருமை கொண்ட வாறோ இழிவுபடுத்த விரும்பினால் அச்சமுதாயம் இழிவடைவதிலிருந்து தப்பிக்காது. மேலும் அவர்களில் எவராவது தமது அண்டை

வீட்டாருடன் அனுதாபம் காட்டுவதில் குறைவைத்தால் அவரும் அதற்கான நஷ்டத்தை அடைவார். உங்கள் இரு சமுதாயங்களுள் எவர் மற்ற சமுதாயத்திற்கு அழிவை ஏற்படுத்தும் எண்ணமுடையவராக இருப்பாரோ அவர், தான் அமர்ந்திருக்கும் மரத்தின் கிளையையே வெட்டுபவரைப் போன்றவராவார். நீங்கள் அனைவரும் இறைவனருளால் கல்வியறிவு பெற்றவர்களாகவும் விளங்குகின்றீர்கள். தற்போது வெறுப்பினை விட்டுவிட்டு நேசத்தில் முன்னேறுவதே அழகாகும். மேலும் இரக்கமின்மையை விட்டுவிட்டு அனுதாபத்தை காட்டுவது தங்களுடைய அறிவுடைமைக்கு உகந்ததாகும். இவ்வுலகக் கஷ்டங்களும் சூரியனின் கடுமையான வெப்பம் மற்றும் கோடைக்காலத்தில் பாலைவனத்தில் மேற்கொள்கின்ற பயணமாகும். எனவே கடினம் மிகுந்த இந்த வழியில் எரியும் இந்த நெருப்பை தணிக்கின்ற, தாகத்தின் போது மரணத்திலிருந்து காக்கின்ற ஒருவருக்கொருவர் ஒற்றுமை எனும் குளிர்ந்த நீரின் தேவை உள்ளது.

இரண்டு சமுதாயங்களுக்கும் சமாதானத்தின் தேவை உள்ள இந்த இக்கட்டான தருவாயில் நான் உங்களை சமாதானத்திற்காக அழைக்கிறேன். இவ்வுலகில் பலவிதமான சோதனைகள் இறங்கிக் கொண்டிருக்கின்றன. பூகம்பங்கள் வருகின்றன, பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. பிளேக் நோயும் இன்னும் விட்டுவிடவில்லை. மேலும் இறைவன் எனக்கு தெரிவித்திருக்கும் செய்தியெல்லாம். உலகம் தனது தீய செயல்களை விட்டு விட்டு தீயவற்றிலிருந்து பாவமன்னிப்புக் கோரவில்லையெனில் இவ்வுலகில் பல்வேறு கடினத்திலும் கடினமான சோதனைகள் தோன்றும் என்பதேயாகும். மேலும் ஒரு சோதனை இன்னும் முடியாதிருக்கையில் இரண்டாவது சோதனை வெளிப்பட்டுவிடும். இறுதியில் மனிதன் என்னதான் நடக்கவிருக்கின்றதோ என்று எண்ணி மிகவும் தொல்லைக்களாகிவிடுவான். மேலும் பலர் துயரங்களுக்கு நடுவில் சிக்கி புத்தி பேதலித்து விடுவார்கள். எனவே எனது தேசத்து சகோதர்களே! அந்நாள் வருவதற்கு முன்பே எச்சரிக்கை ஆகிவிடுங்கள். மேலும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் சமாதானத்தை மேற்கொள்ளுங்கள். மேலும்





எந்த சமுதாயத்தில் சமாதானத்தை தடுக்கும் விதமாக ஏதும் அநீதி இருப்பின் அந்த அநீதியை அச்சமுதாயம் விட்டு விடவும். இல்லாவிடில் இருவருக்குமிடையில் இருக்கும் பகைமையின் அனைத்து பாவங்களும் அந்த சமுதாயத்தின் தலை மீதே விழும்.

மதங்களுக்கிடையேயான இந்த வேறுபாடுகள் நாளுக்குநாள் இதயங்களில் பிரிவினையை ஏற்படுத்துகின்ற, சமாதானத்தை தடை செய்கின்ற ஒரு விஷயமாக இருக்கையில் எவ்வாறு சமாதானம் நிகழும் ? என எவராவது கூறினால்,

நான் அதற்கு பதிலாக கூறுவேன்; உண்மையில் மார்க்க வேறுபாடு என்பது இரு புறமும் பகுத்தறிவு, நீதி, மற்றும் கண்டுணரப்பட்ட விஷயங்களால் ஏற்படும் வேறுபாடே ஆகும். மற்றபடி மனிதன் பகுத்தறிவுக்கும் நீதிக்கும் புறம்பாக இருக்காத, கண்டுணரப்பட்ட விஷயங்களுக்கு எதிராக இருக்காத அம்சத்தை கடைப்பிடிப்பதற்காகத்தானே அவனுக்கு பகுத்தறிவு வழங்கப்பட்டிருக்கிறது ! மேலும் சின்ன சின்ன வேறுபாடுகள் சமாதானத்திற்கு தடையாக இருக்க முடியாது. மாறாக ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறைதூதர் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறை வேதத்தை அவமதிப்பதாலும் பொய்படுத்துவதாலும் செய்யும் தாக்குகின்ற வேறுபாடுகள்தான் சமாதானத்திற்கு தடையாக இருக்கும்.

அதைத்தவிர சமாதானத்தை விரும்புபவர்களுக்காக மகிழ்ச்சிக்கான தருணம் என்னவெனில், எந்த அளவுக்கு இஸ்லாத்தில் போதனைகள் காணப்படுகின்றதோ அந்த போதனை வேத போதனைகளின் ஏதாவதொரு பகுதியில் காணப்படுகின்றது. உதாரணமாக, புதிய மார்க்கமான ஆரிய சமாஜம், வேதங்களுக்குப் பிறகு இறை இல்ஹாம்கள் மீது முத்திரையிடபட்டு விட்டது என்ற கொள்கையை கொண்டிருந்திருக்கின்றனர். ஆனால் இந்த மார்க்கத்தில் அவ்வப்போது அவதாரங்கள் தோன்றிக் கொண்டிருந்திருக் கின்றனர். அவர்களைப் பின்பற்றும் கோடிக்கணக்கான மக்கள் இந்த நாட்டிலேயே காணப்படுகின்றனர். அந்த அவதாரங்கள் தமது இல்ஹாம் பற்றிய வாதத்தினால் இந்த முத்திரையை உடைத்துவிட்டனர். உதாரணமாக ஸ்ரீகிருஷ்ணர் என்ற பெயர்

கொண்ட, இத்தேசத்திலும், வங்காளத்திலும் மேன்மையுடனும் மிக்க மகத்துவத்துடனும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு கண்ணிய மிக்க அவதாரம் தன் மீது இல்ஹாம் இறங்குவதாக வாதிட்டார். மேலும் அவரை பின்பற்றுபவர்கள் அவர் மீது இல்ஹாம் இறங்குகிறது என்பது மட்டுமின்றி அவரை கடவுளாகவும் மிகைப்படுத்தி ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் தனது காலகட்டத்தின் இறைதூதர், அவதாரம் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை.

அவ்வாறே இந்த இறுதி காலகட்டத்தில் இந்துக்களின் சமுதாயத்தில் தனது மேன்மையினால் நாடு முழுவதும் பரவலாக பேசப்படுகின்ற பாபா நானக் சாஹிப் இருக்கின்றார்கள். மேலும் அவரைப் பின்பற்றும் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இருபது இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையிலுள்ள சீக்கியர்கள் என்றழைக்கப்படுவர்களாவர். பாபா சாஹிப் தனது ஜனம்ஸாகியிலும், கிரன்த்திலும் மிக வெளிப்படையாக, இல்ஹாம் இறங்குவதாக வாதம் செய்திருக்கின்றார்கள். எதுவரையெனில் தனது ஜனம்ஸாகியில் ஓரிடத்தில் இஸ்லாமிய மார்க்கம் உண்மையானது என்று எனக்கு இறைவனிடமிருந்து இல்ஹாம் இறங்கியிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். இதனடிப்படையிலேயே அன்னார் ஹஜ்ஜும் செய்தார்கள். மேலும் அனைத்து இஸ்லாமிய கோட்பாடுகளையும் கடைபிடித்து வந்தார்கள். மேலும் அன்னாரால் அற்புதங்களும், இறை அடையாளங்களும் நிகழ்ந்திருக்கின்றன என்பது ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் பாபா நானக் ஒரு தூய தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியாராக இருந்தார் என்பதிலும் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. மேலும் மேன்மை மிக்க இறைவன் தனது அன்பின் பானத்தை பருகவைத்த மக்களுள் அவரும் ஒருவராவார். இஸ்லாம் இறைவன்புறமிருந்து வந்த மார்க்கம் என்பதை சாட்சி கூற மட்டுமே அன்னார் இந்துக்களிடையே பிறந்தார்கள். எவர் டேரா பாபா நானக்கில் காணப்படுகின்ற அருளுக்குரிய பொருள்களைக் காண்பாரோ அவர் மிக வலுவாக லாயிலாஹ இல்லல்லாஹ்... என்ற கலிமாவுக்கு சாட்சி பகர்ந்திருப்பதைக் காணலாம்.





மேலும் ஃபெரோஸ்பூர் மாவட்டத்திலுள்ள குரு ஹர்ஸஹாய் என்னுமிடத்தில் அன்னார் விட்டுச் சென்ற புனிதப் பொருட்களைப் பாருங்கள். அதில் ஒரு குர்ஆனும் கூட இருக்கிறது. ஆகவே பாபா நானக் சாஹிப் வெளிப்படையாக பண்டிதர்களுக்குப் புலப்படாத இரகசியத்தை தனது தூய உள்ளத்தாலும், தூய இயல்பினாலும், தமது தூய முயற்சியினாலும் அறிந்துக் கொண்டார்கள் என்பதில் யாருக்கு சந்தேகம் இருக்க முடியும்? மேலும் அன்னார் இல்ஹாம் இறங்குவதாக வாதித்து இறைவன் புறமிருந்து இறை அடையாளங்களையும், அற்புதங்களையும் காட்டி வேதத்திற்குப் பிறகு எந்த இல்ஹாமும் இல்லை; இறை அடையாளங்கள் வெளிப்படுவதுமில்லை என்று கூறப்படுகின்ற கொள்கைக்கு கண்டனம் தெரிவித்து அதை மறுத்தார்கள். சந்தேகமின்றி பாபா நானக் சாஹிப் இந்துக்களுக்கு இறைவனிடமிருந்து வந்த ஓர் அருள் ஆவார்கள். இஸ்லாம் தொடர்பாக இந்துக்களின் உள்ளங்களில் இருந்த வெறுப்பை விலக்க விரும்பிய இந்துக்களின் கடைசி அவதாரமாக இருந்தார் எனப் புரிந்துக் கொள்ளுங்கள். ஆனால் இந்து மார்க்கம் பாபா நானக் சாஹிபின் போதனையினால் எவ்வித பயனும் பெறாததும் இந்த நாட்டின் துரதிஷ்டமாகும். அன்னார் ஏன் எல்லா இடங்களிலும் இஸ்லாத்தை புகழ்கின்றார் என்று பண்டிதர்கள் அன்னாருக்கு துன்பத்தை கொடுத்தார்கள். அன்னார் இந்து மதம் மற்றும் இஸ்லாமிய மார்க்கத்திடையே சமாதானம் செய்ய வந்தார்கள். ஆனால் அன்னாரது போதனையின் மீது எவரும் கவனம் செலுத்தாதது பரிதாபத்திற்குரியதாகும். அவரிடமிருந்து அவரது தூய போதனைகளிலிருந்து ஏதும் பயன் பெறப்பட்டிருந்தால் இன்று இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாயிருந்திருப்பர். அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்ட நல்லடியார் உலகில் வந்து, சென்றடைந்தும் விட்டார். ஆனால் அறிவற்ற மக்கள் அவரது ஒளியின் மூலம் எந்த ஒளியையும் பெறவில்லை என்பதனை நினைத்து நமக்கு அழுகை வருகிறது. எப்படியிருப்பினும், இறைவனின் வஹி மற்றும் அவனது இல்ஹாம் ஒரு போதும் முடிவடைவதில்லை என்பதனையும்,

இறை அடையாளங்கள் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் மூலமாக எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன என்பதனை நிரூபித்து விட்டுச் சென்றுள்ளார்கள். மேலும் இஸ்லாத்தின் மீதான பகைமை இறை ஒளியின் மீதான பகைமையாகும் என்பதற்கு சாட்சி பகர்ந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அவ்வாறே இக்காலத்தோடு இறைவனின் வஹி மற்றும் இறைவனின் இல்ஹாம் ஒரு போதும் நிறுத்தப்படவில்லை என்பதற்கான அனுபவத்தை நானும் பெற்றவனாவேன். அது மட்டுமின்றி இறைவன் முன்னர் பேசியது போன்றே இன்றும் பேசுகிறான். மேலும் முன்னர் செவியேற்றதைப் போன்றே இன்றும் செவியேற்கிறான். இன்றும் அவனது தொன்மையான பண்புகள் முடிந்துவிடவில்லை. நான் ஏறக்குறைய 30 ஆண்டுகள் இறை உரையாடல்களால் நற்பேறு பெற்றுள்ளேன். மேலும் என் கைகளில் அவன் தனது ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காட்டியிருக்கின்றான். அவை ஆயிரக்கணக்கான சாட்சிகளின் பார்வைக்கு வந்திருக்கின்றன. மேலும் அவை நூல்கள் மற்றும் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும் ஏதாவதோர் அடையாளத்திற்கு சாட்சியாக இல்லாத எந்த வொரு சமுதாயமும் இல்லை.

இத்துனை தொடர்ச்சியான சாட்சியங்கள் இருக்கின்ற போது வலுக்கட்டாயமாக தன்னை வேதங்களின்பால் தொடர்புபடுத்திக் கொள்ளும் ஆரிய சமாஜத்தின் இந்த கொள்கை அதாவது வேதங்களோடு இறை உரையாடல்கள் மற்றும் இல்ஹாம்களின் ஒட்டு மொத்த தொடரும் முடிந்துவிட்டன என்ற போதனை எவ்வாறு ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும். பிறகு புராணங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் தங்களது இந்த கொள்கையை கையில் எடுத்துக் கொண்டு, வேதங்களைத் தவிர இவ்வுலகில் இறைவசனங்கள் என்ற பெயரில் எத்தனை வேதங்கள் உள்ளனவோ அவையனைத்தும் நவூதுபில்லாஹ் மனிதர்களால் இட்டுக்கட்டப்பட்டவை என்றும் கூறுகின்றார்கள். ஆனால் அந்த வேத நூல்களனைத்தும் வேதத்தை மிக அதிகமாக தமது உண்மைக்கு சான்று பகர்கின்றன. மேலும் இறைவனின்





உதவியின் கரம் அவற்றுடன் உள்ளது. மேலான அடையாளங்கள் அவற்றின் உண்மைக்கு சான்றுரைக்கின்றன. பிறகு வேதம் இறைவனின் வார்த்தைகளாகவும், பிற வேதங்கள் இறைவனின் வார்த்தைகளாகவும் இல்லாமலிருப்பதற்கு என்ன காரணம்? இறைவன் மிக நுட்பத்திலும் நுட்பமானவனும் மறைவிலும் மறைவானவனும் ஆவான். எனவே இறைவன் தனது இருப்பை நிரூபிப்பதற்கு ஒரே ஒரு வேதத்தை மட்டும் போதுமானதாகக் கொள்ளாதிருக்க வேண்டும், மாறாக எளிதில் சந்தேகங்களில் வீழ்ந்து விடக் கூடிய பலவீனமான படைப்பாகிய மனிதன், ஒப்புக்கொள்ளும் செல்வத்திலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகாமல் இருப்பதற்காக பல்வேறு நாடுகளிலிருந்து நபியை தேர்ந்தெடுத்து தனது வார்த்தையையும் இறையறிவிப்பையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதையே பகுத்தறிவும் ஏற்றுக் கொள்கின்றது.

மேலும் முழு உலகின் அதிபதியான இறைவன், தனது சூரியனால் கிழக்கிலிருந்து மேற்கு வரை ஒளிபெறச் செய்பவன், தனது மழையினால் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தேவைகளின் போதும் நீர்பாய்ச்சுபவன், அத்தகைய இறைவனுக்கு ஒரே சமயம், ஒரே மொழி பிடித்து போகும் அளவுக்கு ஆன்மீக தர்பிய்யத் விஷயத்தில் அவன் குறுகிய மனப்பான்மையும் கருமித்தனம் கொண்டவனா என்ன ? - நவுதுபில்லாஹ். பகுத்தறிவு இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. மேலும் பரமேசுவரன் (இறைவன்) ஒவ்வொரு மனிதனின் துஆ மற்றும் பிரார்த்தனையை அவரது சொந்த மொழியில் புரிந்துக் கொள்கின்றான்; அதனை வெறுப்பதில்லை. ஆனால் வேதத்தின் சமஸ்கிருத மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் உள்ளங்களில் இல்ஹாம் இறக்குவதற்கு கடுமையாக வெறுக்கின்றான் என்பது எந்தவகையான தத்துவ வாதம்? எவ்விதமான தர்க்க வாதம் என்பதை என்னால் புரிய முடியவில்லை! இந்த தத்துவம் அல்லது வேதக்கூற்று இதுவரை எந்த மனிதனாலும் தீர்வுகாண முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது!

வேதத்தை, அது ஒரு போதும் தனது எந்த பக்கத்திலும் பகுத்தறிவுக்குப் புறம்பானதோடு மட்டுமின்றி இறைவனின் தூய்மையின் மீது கருமித்தனம் மற்றும் ஒரு தலைபட்சத்தின் கறையை ஏற்படுத்தும் போதனையை வெளியிட்டிருக்கும் என்ற விஷயத்திலிருந்து களங்கமற்றதாகவே நான் கருதுகிறேன். மாறாக உண்மை என்னவெனில் எந்தவொரு இறை வேதத்திற்கும் ஒரு நீண்ட காலத்தை கடந்துவிடும் பொழுது, அதனை பின்பற்றுபவர்கள் சில அறியாமையின் காரணமாக சில சுயநலம் கருதியும், தவறாகவோ அல்லது வேண்டுமென்றோ அந்த வேதத்தில் தம் சார்பாக சுய விளக்கங்களை சேர்த்து விடுகின்றார். மேலும் இவ்வாறு சுய விளங்கங்களை சேர்த்துவிடுபவர்கள் பல்வேறு சிந்தனையுடையவர்களாய் இருக்கின்றனர். எனவே ஒரு மார்க்கத்திலிருந்து நூற்றுக்கணக்கான மார்க்கங்கள் உருவெடுத்து விடுகின்றன.

மேலும் வினோதமான விஷயம் என்னவெனில், ஆரியர்கள் இறை இல்ஹாமின் தொடரை ஆரிய குடும்பங்களுக்கும், ஆரிய மார்க்கத்திற்கும் மட்டுமே உரியது என எல்லைக்குட்பட்டதாகவும் இறை இல்ஹாமிற்கான வேத மொழியாகிய சமஸ்கிருதமே எப்பொழுதும் சிறப்பாக இருந்து வந்திருக்கிறது எனவும் அது பரமேஸ்வரனின் மொழியாகும் எனவும் கொள்கை கொண்டிருப்பதைப் போன்றே, யூதர்களும், தங்களுடைய சமுதாயம் மற்றும் இறைவேதம் பற்றி கொள்கை கொண்டுள்ளனர். அவர்களின் பார்வையிலும் இறைவனின் அசல் மொழி 'இப்ரானி' ஆகும். மேலும் இறை இல்ஹாமின் தொடர் எப்பொழுதும் இஸ்ரவேலர்களுக்கும் அவர்களது நாட்டிற்கும் மட்டுமே எல்லைக்குட்பட்டதாக இருந்தது. மேலும் அவர்களது சமுதாயம் மற்றும் அவர்களது மொழியை விட்டும் விலகிய நிலையில் எவரொருவர் தன்னை நபியென்று வாதிப்பாரோ அவரை அவர்கள் பொய்யர்களாகக் கருதுகின்றனர் - நவுதுபில்லாஹ்.

ஆக இவ்விரு கொள்கைகளும் வினோதமானது அல்லவா? இவ்விரு சமுதாயத்தினரும் தத்தமது கருத்தில் ஒரே சிந்தனையைக் கொண்டுள்ளனர். இவ்வாறே உலகில் பல





பிரிவினர் உள்ளனர். உதாரணமாக, பாரசீகர்கள். அவர்கள் தங்களது மார்க்கத்தின் அடிப்படை, வேதத்தை விட பலநூறு கோடி வருடங்கள் முன்னரே வைக்கப்பட்டது எனக் கூறுகின்றனர். (எப்பொழுதும் தனது நாடு, தனது சமுதாயம், தனது வேதத்தின் மொழியினையே இறைவனின் வஹி மற்றும் இல்ஹாமுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்ற) இந்த சிந்தனை காழ்ப்புணர்ச்சியினாலும் குறை மதியினாலும் மட்டுமே உருவாயிருக்கிறது என்பது இதிலிருந்து தெரியவில்லையா? ஏனெனில் முந்தைய காலங்கள் உலகில் ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தின் நிலைமைகள் பற்றியும், ஒரு நாடு மற்ற நாடுகளின் இருப்பைப் பற்றியும் முற்றிலும் அறியாத அளவிற்கு கழிந்திருக்கின்றன. எனவே இவ்வாறான தவற்றினால் வேதம் வழங்கப் பெற்ற ஒவ்வொரு சமுதாயமும் அல்லது இறைவனது ரஸூல் மற்றும் நபி வருகை தந்திருந்த ஒவ்வொரு சமுதாயமும், இறைவனிடமிருந்து கிடைக்கப் பெறவிருந்த நேர்வழி இதுதான் என்றும் இறைவனது வேதம் அவர்களுடைய சமுதாயத்திற்கு மட்டும், அவர்களுடைய நாட்டிற்கு மட்டும் வழங்கப்பட்டிருக் கின்றது எனவும் மற்றவர்கள் அனைவரும் அதிலிருந்து இழப்பிற்குரியவர்கள் எனவும் நினைத்துக் கொண்டது.

இந்த சிந்தனை உலகிற்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தியது. மேலும் உண்மையில் ஒருவர் மற்றவர் மீதான பொறாமை, வெறுப்பின் விதையானது சமுதாயங்களுக்கிடையில் வளர்ந்து கொண்டு சென்றது. ஒரு நீண்ட காலம் வரை ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தை விட்டும் திரை மறைவிலிருந்தது. மேலும் ஒருநாடு மற்றொரு நாட்டுடன் மறைந்திருந்தது. எது வரையெனில் ஆரிய மார்க்க அறிஞர்கள் இமயமலைக்கு அப்பால் எவரும் வசிக்கவில்லை என்ற எண்ணம் கொண்டிருந்தனர்.

பிறகு இறைவன் இடையிலிருந்த திரையை விலக்கியபோது, மக்களது பூமிவாழ் மக்களைப் பற்றிய ஞானம் விரிவடைந்தது. அது எப்படிப்பட்டதொரு காலமாக இருந்ததெனில் இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் மற்றும் தங்களது ரிஷிகள் மற்றும் ரஸூல்களைப்பற்றி மக்கள் தமது உள்ளங்களில் செதுக்கிய தவறான சிறப்பு அம்சங்கள் அனைத்தையும் தங்களது

கொள்கைகளில் இணைத்துக் கொண்டனர். அவை அவர்களது மனதில் வலுவான மற்றும் கல்வெட்டினைப் போன்றாகிவிட்டன. மேலும் ஒவ்வொரு சமுதாயமும், இறைவனின் தலைமையகம் எப்போதும் நம்முடைய நாடாகவே இருந்திருக்கிறது என்று எண்ணிவந்தனர். ஏனெனில் அச்சமயத்தில் பெரும்பாலான சமுதாயங்கள் மீது மிருகத்தனமான பண்புகள் மிகைத்து காணப்பட்டன. மேலும் ஒரு தொண்மையான சடங்கை மறுப்பவருக்கு வாளால் பதில் தரப்பட்டு வந்தது. எனவே ஒவ்வொரு சமுதாயத்திலும் அவர்களாலேயே ஊட்டப்பட்ட ஆவேசங்களை தனித்து அவர்களிடையே சமாதானத்தை செய்து வைக்க யாருக்கு தைரியம் இருந்தது ?

கௌதம புத்தர் அந்த சமாதானத்தை உருவாக்க நாட்டம் கொண்டார். மேலும் அவருக்கு வேதம்தான் அனைத்தும்; அதற்குமேல் ஒன்றுமில்லை என்ற கருத்தில் உடன்பாடு இருக்கவில்லை. மேலும் சமுதாயம், நாடு மற்றும் குடும்பத்தில் தனிச்சிறப்பு உண்டு என்பதை ஏற்பவராகவும் அவர் இல்லை. அதாவது வேதத்தின் அடிப்படையில் தான் அனைத்தும் என்றும், இதே மொழி இதே நாடு மற்றும் இதே பிராமணன்தான் பரமேஷ்வரனின் இல்ஹாமிற்கு நிரந்தரமாக அவனது சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்ற கொள்கை அவருடையதல்ல, எனவே அவர் இந்த உடன்பாடின்மையால் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியிருந்தார். மேலும் அவரது பெயர் நாத்திகர் என்றும் மார்க்கமிழந்தவர் என்றும் வைக்கப்பட்டது. அவ்வாறே இன்றைய காலத்தில் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் இறை தன்மையை ஒப்புக்கொள்ளாத ஐரோப்பிய, அமெரிக்க ஆராய்ச்சியாளர் - இறைவனையும் சிலுவையில் அறைந்து கொல்ல முடியும் என்பதை அவர்கள் உள்ளம் ஏற்றுக் கொள்வதில்லை - அத்தகைய அனைத்து ஆராய்ச்சியாளர்களும் பாதிரிகளின் பார்வையில் நாத்திகர்கள் ஆவர்.

ஆகவே இவ்வகையிலேயே புத்தரும் நாத்திகராக கருதப்பட்டார். மேலும் கடும் எதிரிகளின் வழக்கத்தைப் போன்று, பொது மக்களுக்கு வெறுப்பினை ஊட்டுவதற்காக, அவர் மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. இதன் கடைசி விளைவாக புத்தர் தமது





சொந்த தேசமான ஆரிய தேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். மேலும் ஹிந்துக்கள், புத்த மதத்தையும் அதன் வெற்றியையும் இன்றுவரை பெறும் வெறுப்புடனும் இழிவான பார்வையுடனும் காண்கின்றனர்.

“நபி தன் சொந்த தேசத்தை தவிர்த்து (எங்கும்) கண்ணியமற்றவர் அல்லர்.” என்ற ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கூற்றிற்கிணங்க புத்தர் மற்ற நாடுகளின் பக்கம் இடம் பெயர்ந்து சென்று பெறும் வெற்றியைப் பெற்றார். எவ்வாறெனில் உலகின் மூன்றில் ஒரு பகுதி புத்த மதத்தால் நிரம்பியுள்ளது என்று கூறப்படுகிறது. மேலும் அம்மதம் தெற்கு ரஷ்யா மற்றும் அமெரிக்கா வரை பரவியிருந்தாலும் பின்பற்றுபவர்களின் பெரும்பான்மையை கருத்தில் கொண்டால் அதன் அசல் தலைமையகம் சீனா மற்றும் ஜப்பான் ஆகும்.

பிறகு இப்போது நாம் அசல் நோக்கத்தின் பக்கம் திரும்பியவாறு எழுதுகிறோம். ஒரு மார்க்கம் மற்ற மார்க்கத்தைப் பற்றி அறியாமலிருந்த அந்த கால கட்டங்களில் இந்த அறியாமையின் நிலைமையில் ஒவ்வொரு சமுதாயமும் தங்களது மார்க்கம் மற்றும் தங்களது வேதம் என்ற எல்லையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எல்லையை அடிப்படையாகக் கொண்ட இதன் இறுதி விளைவு, ஒரு நாடு மற்றொரு நாடு இருப்பதை அறிந்த போது பல்வேறு நாடுகளைச் சார்ந்த மக்கள் ஒருவர் மற்றவர்களது மார்க்கத்தைப் பற்றி அறிந்து கொண்ட போது ஒரு நாட்டின் மார்க்கம் மற்ற நாடுகளின் மார்க்கத்தை ஏற்க இயலாமல் போகும் கடினம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஏனெனில் ஒவ்வொரு மதத்திற்கும் கவிஞர்ளைப் போன்று மிகைப்படுத்தி சிறப்புகளும் மேன்மைகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்ததை நீக்குவது அவ்வளவு எளிதான பணியாக இருக்கவில்லை. எனவே ஒவ்வொரு மார்க்கத்தினரும் மற்ற மார்க்கத்தினைப் பொய்படுத்துவதில் குறியாக இருந்தனர். ஒரு மார்க்கம் மற்ற மார்க்கத்தினைவிட தங்களது உயர்வினையே பறை சாற்றிக் கொண்டது. மேலும் நபித்துவத்தின் தொடரை தனது குடும்பத்திற்கு மட்டுமே என சுருக்கிக் கொண்டனர். மேலும் தங்கள் மார்க்கம் பற்றி எவ்வளது நீண்ட வரலாற்றைக்

கூறினர் எனில் வேதத்தின் வரலாற்றை கூறுபவர்கள் அவர்கள் முன் வெட்கத்தால் தலைகுனிகின்றனர்.

இங்கு இப்ரானியர்களின் மார்க்கம் எல்லையையே கடந்துவிட்டது. சிரியாதான் இறைவனின் அரசவை என நிர்ணயித்து விட்டது. மேலும் அவர்களது வம்சத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களே நாட்டின் சீர்திருத்தத்திற்காக எப்போதும் அனுப்பப்படத் தகுதி பெற்றவர்களாகக் குறிப்பிடப்பட்டனர். ஆயினும் அந்த சீர்திருத்தம் இஸ்ரவேலர்களுக்காக மட்டுமே இருந்தது. மேலும் இல்ஹாம் மற்றும் இறைவனின் வஹி அவர்களின் குடும்பத்துடனேயே முத்திரையிடப்பட்டுவிட்டது. மேலும் வேறெவரும் வாதித்தால் அவர் பொய்யர் என அழைக்கப்பட வேண்டும் என்றனர்.

இவ்வாறே ஆரியர்களிடமும், இஸ்ரவேலர்களிடம் பரவிய இதே கருத்துக்கள் தான் பரவின. மேலும் அவர்களது கொள்கைப்படி, இறைவன் ஆரியர்களுக்கு மட்டுமே ராஜா ஆவான். மேலும் எப்படிப்பட்ட ராஜாவெனில் அவனுக்கு மற்ற தேசங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. மேலும் எப்பொழுதிலிருந்து இறைவன் இருக்கிறானோ அப்பொழுதிலிருந்து ஆரிய மண்ணின் நீர் மற்றும் காற்றே அவனுக்கு பிடித்துப் போய்விட்டது என எவ்வித ஆதாரமுமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவன் ஒருபோதும் மற்ற நாடுகளுக்கு சுற்றி வருவதனையும், அவன் படைத்து மறந்த அந்த அப்பாவிகளின் நலனைக் கருத்தில் கொள்ளவும் விரும்பவில்லை.

நண்பர்களே! இறைவனுக்காக சிந்தித்துப் பாருங்கள்! இந்த கொள்கைகளை மனித இயல்பு ஒப்புக் கொள்ள முடியுமா? அல்லது எந்த பகுத்தறிவாவது இதற்கு உள்ளே இடம்தர முடியுமா? ஒரு புறம் இறைவனை அனைத்துலகிற்கும் இறைவனாக ஏற்றுக் கொண்டு, அதே வாயினால் அவன் அனைத்து உலகத்தையும் பரிபாலிப்பதை விட்டும் கையை விலக்கிக் கொண்டான் என்பதும், குறிப்பிட்ட ஒரு சமுதாயம் மற்றும் குறிப்பிட்ட ஒரு நாட்டின் மீதே அவனது கருணையின் பார்வை உள்ளது என்பதும் எவ்வகையில் அறிவுடமை என்பதை என்னால் உணர முடியவில்லை! அறிவு படைத்தவர்களே! தாங்களாகவே





நீதியுடன் கூறுங்கள் இறைவனின் பௌதீக இயற்கைச் சட்டத்தில் இதற்கு ஏதாவது சாட்சி இருக்கிறதா? பின்னர் அவனது ஆன்மீகச் சட்டம் ஏன் ஒருதலைப்பட்சத்தை அடிப்படையாக கொண்டிருக்கிறது!

மேலும் அறிவுடன் சிந்தித்தால் ஒவ்வொரு செயலின் நன்மை அல்லது தீமையினை அதன் விளைவைக் கொண்டும் அறிய முடியும். ஆகவே எந்த நபிமார்களின் அடிமைத்துவம் மற்றும் கட்டுப்படுதல் எனும் வட்டத்திற்குள் எல்லாவகையான கோடிக்கணக்கான மனிதர்கள் இணைந்திருக்கிறார்களோ அத்தகைய இறைவனின் கண்ணியமிக்க நபிமார்களை அவமதிப்பதும் அவர்களை பழித்துரைப்பதும் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் ? என்பதை நான் கூறத் தேவையில்லை. இறுதியில் அதன் பலன் தான் என்ன ? ஏனெனில் இவ்வாறான விளைவுகளில் ஏதாவது சிலவற்றைக் கண்டிராத எந்தவொரு சமுதாயமும் இல்லை !

கண்ணியத்திற்குரியாரே! பல்வேறு சமுதாயங்களின் நபிமார்களையும் இறைதூதர்களையும் கண்ணியக்குறைவாகக் குறிப்பிடுவதும் அவர்களை பழித்துரைப்பதும் எத்தகைய விஷம் என்றால், அது இறுதியில் உடலைமட்டும் அழித்துவிடுவதில்லை; மாறாக ஆன்மாவையும் அழித்து மார்க்கம் உலகம் ஆகிய இரண்டையும் அழித்துவிடுகின்றது என்பதை பழைய அனுபவமும் மீண்டும் மீண்டும் வரும் சோதனைகளும் நிரூபித்து காட்டிவிட்டன. ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒருவர் மற்றவரின் மார்க்க வழிகாட்டியை குறை கூறுவதிலும். அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தஸ்தை சீர்குலைப்பதிலும் ஈடுபட்டால் அந்நாடு நிம்மதியாக வாழ முடியாது. மேலும் எந்த சமுதாயங்களில் ஒரு சமுதாயம் அல்லது இரண்டு சமுதாயமும் ஒருவர் மற்றவரது நபி அல்லது ரிஷி மற்றும் அவதாரத்தை தீமையாகவோ தீயவார்த்தைகளால் நினைவு கூறுவார்களோ அந்த சமுதாயங்களுக்கிடையே ஒருபோதும் உண்மையான ஒற்றுமை நிலவ முடியாது. தங்களது நபி அல்லது மார்க்கத் தலைவர் பற்றிய அவமதிப்பைக் கேட்டு யார்தான் உணர்ச்சிவசப்படமாட்டார்கள்? குறிப்பாக முஸ்லிம்கள்

எத்தகைய சமுதாயமெனில் அவர்கள் தங்களது நபியை இறைவனாகவோ அல்லது இறைவனின் மகனாகவோ ஆக்கவில்லையென்றாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தாய்மார்களின் வயிற்றில் பிறந்து (இறைவனால்) தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா மனிதர்களை விடவும் மிக்க மேன்மைக்குரியவராகக் கருதுகின்றனர். எனவே முஸ்லிம்களின் தூய நபி (ஸல்) அவர்களைப் பற்றி பேசுகையில் கண்ணியத்திற்குரிய, தூய வார்த்தைகளால் நினைவு கூராதவரை அந்த முஸ்லிம்களுடன் எவ்வகையிலும் சமாதானம் ஏற்பட சாத்தியமேயில்லை !

மேலும் நாங்கள் மற்ற சமுதாயங்களின் நபிமார்களைப் பற்றி ஒரு போதும் தீய வார்த்தைகளால் பேசுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் எமது கொள்கை என்னெவெனில், இவ்வுலகில் பல்வேறு சமுதயங்களுக்காக எத்தனை நபிமார்கள் வந்திருக்கிறார்களோ மேலும் கோடிக்கணக்கான மக்கள் அவர்களை ஏற்றிருக்கிறார்களோ, மேலும் உலகின் ஏதோ ஒரு பகுதியில் அவர்களின் நேசம் மற்றும் மகத்துவம் போற்றப்படுகிறதோ, மேலும் இந்த நேசம் மற்றும் நம்பிக்கையில் ஒரு நீண்ட காலம் கடந்து விட்டதோ அவர்களின் இந்த ஒரு சான்றே உண்மைக்குப் போதுமானது என்பதாகும். ஏனெனில் அவர்கள் இறைவன் புறமிருந்து வந்தவர்கள் இல்லையெனில் அவர்களை ஏற்றுக் கொள்வது கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் பரவியிருக்காது. இறைவன் தனது ஒப்புக்கொள்ளப் பட்ட அடியார்களுக்கான கண்ணியத்தை மற்றவர்களுக்கு ஒருபோதும் கொடுப்பதில்லை. மேலும் எந்த பொய்யனாவது அவர்களது இருக்கையில் அமர விரும்பினால் அவர் உடனே நாசமாகிவிடுவார், அழிக்கப்படுவார்.

இதனடிப்படையில் நாம் (சமஸ்கிருத) வேதத்தையும் இறைவன் புறமிருந்து வந்ததாக நம்புகிறோம். மேலும் வேதத்தின் போதனைகள் முழுமையான முறையில் எந்த பிரிவினரையும் இறைவனை வணங்குபவர்களாக ஆக்கவுமில்லை; ஆக்கவும் முடிந்திருக்கவில்லை என்பதை நாம் பார்க்கின்றோம். அப்படியிருந்தபோதிலும் நாம் அதன் ரிஷிகளை கண்ணியத்திற்





குரியோராகவும் தூயவர்களாகவும் கருதுகிறோம். மேலும் இந்நாட்டில் சிலை வணங்கிகள் அல்லது அக்னியை வணக்குபவர்கள் அல்லது சூரியனை வணங்குபவர்கள் அல்லது கங்காவை பூஜிப்பவர்கள் அல்லது ஆயிரக்கணக்கான தெய்வங்களை பூஜிப்பவர்கள் அல்லது ஜைன மதத்தவர்கள் அல்லது சாகித மதத்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்களது மதங்களை வேதத்தைச் சார்ந்தவையாகவே கூறுகின்றனர். மேலும் வேதம் எப்படிப்பட்டதொரு ஒட்டுமொத்தமான நூலெனில், இவ்வனைத்து பிரிவுகளும் அதிலிருந்து தத்தமது நோக்கங்களுக்கேற்ப கொள்கைகளை எடுத்துக் கொள்கின்றனர். ஆயினும் இறைவனின் போதனைக்கேற்ப வேதம் மனிதனால் இட்டுக்கட்டப்பட்டதன்று என்பதே நமது உறுதியான கொள்கையாகும். மனிதனது இட்டுக்கட்டில் கோடிக்கணக்கான மக்களை தன் வசம் ஈர்த்துக் கொள்வதற்கோ பிறகு நிரந்தரமானதொரு மார்க்கத்தை நிறுவுவதற்கோ ஆற்றல் இல்லை. மேலும் வேதத்தில் நாம் சிலையின் வழிபாடுபற்றிய கூற்றை எங்கும் படிக்கவில்லையென்றாலும், சந்தேகத்திற் கிடமின்றி நெருப்பு, வாயு, நீர், சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வழிபாட்டில் வேதம் நிறைந்து காணப்படுகிறது. மேலும் எந்தவொரு அத்தியாயத்திலும் இவற்றின் வழிபாட்டிற்கு தடையுமில்லை. இப்போது இந்துக்களின் மற்றனைத்து தொன்மையான பிரிவுகளும் பொய்யானவை, ஆரியர்களின் புதிய பிரிவே உண்மையானது என்று யார் தீர்மானிப்பது ? மேலும் வேதத்தை ஆதாரமாகக் கொண்டு இவற்றை வழிபடும் மக்களின் கைகளில் இவற்றை வழிபடுவது வேதத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது; எங்கேயும் தடைவிதிக்கப்படவில்லை என்ற வலுவான ஆதாரம் இருக்கிறது. மேலும் இவை அனைத்தும் பரமேசுவரனின் (இறைவன்) பெயர்கள் எனக் கூறுவது ஒரு வாதமாகும்; அது இதுவரை தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. மேலும் அது நிரூபிக்கப்பட்டு விட்டால் பனாரஸ் மற்றும் பிற நகரங்களின் ஆரியர்களுடைய கொள்கைகளை மாபெரும் பண்டிதர்கள் ஏற்காமலிருப்பதற்கு எவ்வித காரணமும்

தெரியவில்லை. முப்பது, முப்பத்தைந்து வருடகால முயற்சிகளுக்குப் பிறகும் கூட மிகக்குறைவான இந்துக்களே ஆரிய மார்க்கத்தை தழுவியுள்ளனர். மேலும் சமாதான தர்மத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் இந்துக்களின் பிற பிரிவினர்களுடன் ஒப்பிடும் போது அவர்களுக்கு எதிரில் ஒன்றுமே இல்லை என்ற அளவிற்கு குறைவாகவே உள்ளனர். மேலும் இந்துக்களின் பிற பிரிவினர்கள் மீது ஆரியர்களுக்கு எவ்வித பரந்த தாக்கமும் இல்லை.

இவ்வாறே 'நியோக்' கொள்கையை வேதத்தைச் சார்ந்ததாக கூறப்படுகிறது. இதுவும் மனிதனின் தன்மான உணர்வும், மேன்மையும் ஏற்றுக் கொள்ள இயலாத ஒரு கொள்கையாகவே உள்ளது. ஆனால் நான் இப்போது கூறியது போன்று, உண்மையில் இது வேதத்தின் போதனைதான் என்பதை நம்மால் ஏற்க இயலாது. மாறாக இப்படிப்பட்ட போதனைகள் சுயநலத்திற்காக பின்னர் வேதத்தோடு இட்டுக்கட்டப்பட்டுள்ளது என்பதன் பக்கமே நமது நல்லெண்ணம் மிக வலுவாக நம்மை இட்டுச் செல்கிறது. மேலும் இவ்வேதம் தோன்றி ஆயிரக்கணக்கான வருடங்கள் கடந்து விட்டனவென்பதால் பல்வேறு காலகட்டங்களில் சில வேத சாஸ்திரிகள் பல விதமான நிறைகுறைகளை செய்திருக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆகவே ஆரிய மார்க்கத்தின் கோடிக்கணக்கான மக்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக அதனை இறைவனின் வார்த்தைகளாக நம்புகின்றனர் என்பதே நமக்கு வேதத்தின் உண்மைக்கு போதுமானதொரு ஆதாரமாகும். மேலும் இந்த கண்ணியம், வேறு எந்த இட்டுக்கட்டிக் கூறுபவனின் வார்த்தைக்கும் கொடுக்கப்படுவது சாத்தியமற்றதாகும்.

மேலும் இவ்வனைத்து சிக்கல்கள் இருந்தும் கூட நாம் இறைவனுக்கு அஞ்சி வேதத்தை இறைவனின் வார்த்தையாக கருதுகின்றோம். மேலும் அதன் போதனைகளில் இருக்கின்ற தவறுகள், வேத சாஸ்திரிகளின் பிழைகளாகக் கருதுகிறோம். அப்படி இருக்கும் போது, ஆரம்பம் முதல் முடிவுவரை ஏகத்துவத்தால் நிரம்பியிருக்கின்ற திருக்குர்ஆன், அதில் எந்த இடத்திலும் சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவற்றை





வணங்குமாறு போதிக்கவில்லை; மாறாக தெளிவான சொற்களால், 'சூரியனை வழிபடாதீர்கள் சந்திரனையும் வழிப்படாதீர்கள். வேறெந்த படைப்பினத்தையும் வழிபடாதீர்கள். உங்களைப் படைத்தவனை வழிபடுங்கள் என்று கூறுகிறது. (41:38 காண்க)

அது மட்டுமின்றி, திருக்குர்ஆன் இறைவனின் பழைமை வாய்ந்த அடையாளங்கள் மற்றும் புத்தம் புதிய அடையாளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் இறை இருப்பை காட்டுவதற்கு ஒரு கண்ணாடியாக விளங்குகிறது. அப்படி இருக்கும்போது ஏன் மிருகத்தனமாக அதன் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது! மேலும் நாம் ஆரியர்களுடன் நடந்து கொள்கிறபடி அவர்கள் நம்முடன் ஏன் நடந்து கொள்வதில்லை? மேலும் நாட்டில் பகைமை மற்றும் எதிர்ப்பின் விதை ஏன் விதைக்கப்படுகிறது? அதன் விளைவு நன்றாக இருக்கும் என்று நம்பப்படுகிறதா என்ன? மலரை நீட்டுகின்ற ஒரு மனிதர் மீது கல் வீசப்படுவது நல்ல செயலா? எவர் பாலை எடுத்து வைக்கிறாரோ அவர் மீது சிறுநீர் கழிக்க வைப்பது நன்னடத்தையாகுமா?

இந்துக்கள் மற்றும் ஆரியர்கள் எங்களது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை இறைவனின் உண்மையான தூதராக ஏற்றுக் கொண்டு, இனிமேல் அவமரியாதையாக நடந்து கொள்வதையும் பொய்படுத்துவதையும் விட்டு விடுவோம் என்ற ஒரு முழுமையான சமாதான உடன்படிக்கை செய்வதற்கு ஆயத்தமானால் அஹ்மதிய்யா ஜமாஅத்தை சேர்ந்த நாங்கள் எப்போதும் வேதத்தை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக இருப்போம்; வேதம் மற்றும் அதன் ரிஷிகளை கண்ணியத்துடனும், நேசத்துடனும் அழைப்போம். அவ்வாறு நடக்காவிட்டால் மூன்று லட்சம் ரூபாய் மதிப்பிற்கு குறையாத ஒரு பெரிய தொகையை இந்துக்களிடம் அபராதமாக செலுத்துவோம் என்ற உடன்படிக்கையில் முதன் முதலில் கையெழுத்திட நான் ஆயத்தமாக இருக்கின்றேன். மேலும் இந்துக்கள் மனதார எங்களுடன் உடன்பட விரும்பினால் அவர்களும் அவ்வாறே உடன்படிக்கையை எழுதி அதில் கையழுத்திட வேண்டும். மேலும் அந்த உடன் படிக்கையிலும் நாங்கள் ஹஸ்ரத் முஹம்மது

முஸ்தஃபா ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தூதுத்துவம் மற்றும் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொள்கிறோம் என்றும் அன்னார் (ஸல்) அவர்களை உண்மையான நபியாகவும் தூதராகவும் கருதுகின்றோம் எனவும் நம்பிக்கை கொண்டவரின் பொருத்தமான ஒரு செயலைப் போன்று இனிமேல் அன்னாரை மதிப்பு மற்றும் மரியாதையுடன் நினைவு கூறுவோம் என்றும், நாங்கள் அவ்வாறு செய்யாவிடில் மூன்று லட்சம் ரூபாய் மதிப்பிற்கு குறையாத ஒரு பெரிய தொகையை அபராதமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரிடம் செலுத்துவோம் என்றிருக்க வேண்டும்.

இப்போது எங்களுடைய அஹ்மதிய்யா ஜமாஅத் நான்கு இலட்சத்திற்கும் குறைவின்றி இருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்.* எனவே இவ்வாறான பெரிய பணிகளுக்கு மூன்று இலட்சம் ரூபாய் சந்தா ஒன்றும் பெரிய விஷயமல்ல! மேலும் எங்கள் ஜமாஅத்தை விட்டு தற்போது வெளியே உள்ள மக்கள் உண்மையில் சிதறுண்ட இயல்புடையவர்களாகவும், சிதறுண்ட எண்ணமுடையவர்களாகவும் உள்ளனர். அவர்களின் பார்வையில் கீழ்படிதலுக்குத் தகுதியான எந்தவொரு தலைவரின் கீழும் அவர்கள் இல்லை. எனவே நான் அவர்களைப்பற்றி ஒன்றும் கூற இயலாது. இப்போது அவர்களோ என்னையும் நிராகரிப்பாளனாகவும் தஜ்ஜாலாகவும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்துக்கள் என்னுடன் இப்படிப்பட்ட உடன்படிக்கை செய்துக் கொண்டால் (என்னை ஏற்காத முஸ்லிம்களான) அம்மக்களும் இப்படிப்பட்ட நாகரீகமான சமுதாயத்தில் வேதத்தையும் ரிஷிமார்களையும் தீய வார்த்தைகளால் குறிப்பிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வசைமாரி பொழியவைக்கும் வீணான செயலை செய்ய முனையமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அவ்வாறான

* *இது இந்நூல் எழுதிய ஆண்டாகிய 1908-ல் கூறப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது இறையருளால் உலகெங்கும் சுமார் 20 கோடி பேர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*- வெளியீட்டாளர்*





வசைமொழிகள் உண்மையில் இச்செயலை செய்ய முற்படும் மக்களையே சாரும். ஏனெனில் இவ்வாறான செயல் வெட்கம் மற்றும் பெருந்தன்மைக்கு எதிரானதாகும். எனவே இந்த உடன்படிக்கைக்குப் பிறகு (முஸ்லிம்களாகிய) அவர்கள் தமது வாயை திறக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் உடன்படிக்கையினை வலுப்பெற செய்வதற்காக இரு பிரிவினர்களிலும் பத்தாயிரம் பத்தாயிரம் பகுத்தறிவு வாதிகளின் கையெழுத்து அதில் இட வேண்டியது அவசியமாகும்.

அன்பர்களே! சமாதானத்தைப் போன்று வேறெதுவும் இல்லை. வாருங்கள் நாம் இந்த உடன்படிக்கையின் மூலமாக ஒன்றுபடுவோம். ஒரே சமுதாயமாவோம். ஒருவருக்கொருவர் பொய்படுத்துவதனால் எந்த அளவு விரிசல் ஏற்பட்டுவிட்டது என்று நீங்களே பார்க்கின்றீர்கள். மேலும் நாட்டிற்கு எந்த அளவு இழப்பு நேருகிறது. வாருங்கள்! இப்போது ஒருவர் இன்னொருவரை உண்மைப்படுத்துவதனால் எந்த அளவுக்கு அருள்கள் இருக்கின்றன என்பதையும் சோதித்துப்பாருங்கள்!! சமாதானத்திற்கான மிகச்சிறந்த வழிமுறை இதுதான். அவ்வாறல்லாமல் வேறு எவ்விதத்திலும் சமாதானம் செய்வது என்பது ஒரு தெளிவான, பளபளப்பான ஒரு கொப்புளத்தை கண்டு அதனை அப்படியே விட்டுவிடுவதையும், அதன் வெளிப்புறமான பளப்பளப்பின் மீது மகிழ்ச்சியடைவதையும் போன்றதாகும். ஆனால் அதனுள் அழுகிய, துர்நாற்றம் வீசும் சீழ் நிறைந்துள்ளது.

இந்து, முஸ்லிம்களிடையே இன்றைய நாட்களில் பெருகிவரும் நயவஞ்சகத்தனம் மற்றும் குழப்பத்தை இங்கு எடுத்துரைக்கும் எந்தவொரு நோக்கமும் எனக்கு இல்லை. அதன் காரணங்கள் மத வேறுபாடுகளோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. மாறாக பிற நோக்கங்கள் அதன் காரணங்களோடும், அவை உலக ஆசைகள் மற்றும் பிரச்சினைகளுடன் தொடர்புடையவையாகும். உதாரணமாக, இந்துக்களிடையே ஆரம்பத்திலிருந்தே, அரசாங்கம் மற்றும் நாட்டின் விவகாரங்களில் அவர்களது தலையீடு இருக்கவேண்டும் என்ற ஆசை இருந்து வருகிறது. அல்லது குறைந்தபட்சம் நாட்டின்

விவகாரங்களில் அவர்களது கருத்தையாவது பெறவேண்டும் என்றும் அரசாங்கம் அவர்களது ஒவ்வொரு முறையீடுகளையும் கவனத்துடன் கேட்க வேண்டும் என்பதும் ஆங்கிலேயர்களைப் போன்று அரசாங்கத்தின் பெரிய பெரிய பதவிகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. முஸ்லிம்களால் ஏற்பட்ட தவறு என்னவெனில் அவர்கள் இந்துக்களின் இந்த முயற்சிகளில் ஈடுபடவில்லை. மேலும் நாம் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம் என்று கருதினர். மேலும் இவ்வனைத்து முயற்சிகளால் நன்மை ஏதும் உள்ளதெனில் அது இந்துக்களுக்குத்தான்; முஸ்லிம்களுக்கு இல்லை என்று நினைத்தனர். எனவே அவர்கள் சேர்ந்து செயல்படுவதில் கையை விலக்கிக்கொண்டது மட்டுமின்றி எதிர்ப்பு தெரிவித்து இந்துக்களின் முயற்சிகளுக்கு தடைக்கல்லாக இருந்தனர். அதனால் துன்பம் அதிகமாகிவிட்டது.

இந்த காரணங்களினாலும் கூட உண்மையான பகைமைக்கு சுய கருத்துகள் உருவாயின என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் உண்மையான காரணங்கள் இவைதான் என்பதை ஒருபோதும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். மேலும் இந்து முஸ்லிம்களிடையே நிலவும் பகைமை மற்றும் நயவஞ்சகத்திற்குக் காரணம் மதச்சண்டைகள் அல்ல என்று கூறுபவர்களது கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. எனினும் உண்மையில் சண்டைகள் அரசியல் ரீதியானவையாகும்.

முஸ்லிம்கள் தங்களுடைய ஆகுமான உரிமைகளைக் கேட்பதில் இந்துக்களுடன் இணைய ஏன் அஞ்சுகிறார்கள் என்பதனையும் ஏன் இன்று வரை அவர்களின் காங்கிரஸில் இணைய மறுக்கிறார்கள் என்பதனையும் ஏன் இறுதியில் இந்துக்களது கருத்து சரியானதென்றெண்ணி அவர்களது அடியொட்டி வைத்தார்கள் என்பதனையும், ஆனால் தனித்துவிட்டு, அவர்களுக்குப் போட்டியாக ஒரு முஸ்லிம் அஞ்சுமனை (கட்சியை) நிறுவினார்கள், ஆயினும் அவர்களது சேர்க்கையை ஏற்கவில்லை என்பதனை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.





நண்பர்களே! இதற்கு உண்மையில் மதம் தான் காரணம். அதைத் தவிர வேறொன்றும் இல்லை. இன்று அதே இந்துக்கள் தூய கலிமாவை கூறிவிட்டு முஸ்லிம்களுடன் ஒன்றி விடுவார்கள் என்றால், அல்லது முஸ்லிம்கள், இந்துவாகி நெருப்பு, காற்று போன்றவற்றை வேதத்தின் கட்டளைக்கேற்ப பூஜிக்க தொடங்கிவிட்டு இஸ்லாத்தை விட்டுவிடுவார்கள் என்றால் எந்த சண்டை சச்சரவுகளுக்கு அரசியல் என்று தற்போது பெயர் சூட்டுகின்றனரோ அது ஒரு நொடிப் பொழுதில் அவை ஒரு காலத்தில் ஒரு போதும் இருந்ததேயில்லை என்ற அளவுக்கு இல்லாமற் போய்விடும்!

ஆகவே, இதிலிருந்து எல்லா பகைமை மற்றும் வெறுப்பின் ஆணிவேர் உண்மையில் மத வேறுபாடுகளே என்பது தெளிவாகிறது. இந்த மத வேறுபாடு தான் ஆரம்பத்திலிருந்தே எல்லையை கடந்து விட்டபோதெல்லாம் இரத்த ஆறுகளை ஓட வைத்திருக்கிறது. முஸ்லிம்களே! இந்துக்கள் உங்களை மத வேறுபாட்டின் காரணத்தினால் ஒரு வேற்று சமுதாயத்தினராக கருதிக்கொண்டிருக்கும் நிலையில், நீங்களும் இந்த காரணத்தினால் அவர்களை ஒரு வேற்று சமுதாயத்தினராக கருதுகின்ற நிலையில் இதற்கான காரணத்தை அகற்றாத வரை உங்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில் எவ்வாறு உண்மையான தூய்மை ஏற்பட முடியும்? ஆயினும் சிலநாட்கள் நயவஞ்சகத்தனமாக ஒருவருடன் இன்னொருவர் இணைந்திருப்பது சாத்தியமாகலாம். ஆனால் எதனை உண்மையில் தூய்மை என்றழைக்க வேண்டுமோ அந்த மனத்தூய்மை எப்போது நீங்கள் வேதம் மற்றும் வேத ரிஷிகளை உண்மையான மனதுடன் இறைவன் புறமிருந்து வந்தவர்களாக ஏற்றுக் கொள்வீர்களோ, அதே போன்று இந்துக்கள் தங்களது கருமித்தனத்தை விலக்கிவிட்டு நமது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நபித்துவத்தை ஒப்புக்கொள்வார்களோ அப்பொழுது தான் ஏற்படும். நினைவில் கொள்ளுங்கள். நன்றாக நினைவிற்கொள்ளுங்கள். உங்களிடையேயும் இந்துக்களிடையேயும் உண்மையான சமாதானத்தை உருவாக்கப் போவது, இந்த ஒரு கோட்பாடே

ஆகும். மேலும் இதுவே (உள்ளத்தின்) அழுக்குகளை கழுவும் தண்ணீராகும். மேலும் பிரிந்து போன இவ்விரு சமுதாயங்களும் ஒன்றுபடும் நாள் வந்துவிட்டால் இறைவன் எவ்விஷயத்திற்காக எமது உள்ளத்தை திறந்து விட்டானோ அதை அவர்கள் உள்ளத்திற்காகவும் திறந்து விடுவான்.

ஆனால் அத்துடன் இந்துக்களுடன் உண்மையான அனுதாபத்தோடு நடந்து கொள்வதும் அவசியமானதாகும். மேலும் நட்புடன் நடந்து கொள்வதையும், நல்லொழுக்கத்தை கடைபிடிப்பதையும் உங்கள் பழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் அவர்களுக்கு வருத்தமளிக்கும் செயல்களை விட்டும் அச் செயல்கள் நமது மார்க்கத்தில் வாஜிப் (எனும் கடமை) ஆன விஷயங்களைச் சார்ந்தவையாகவோ, ஃபர்ழ் (எனும் கட்டாயக் கடமை) ஆன விஷயங்களைச் சார்ந்தவையாகவோ இல்லாமலிருந்தால் உங்களை விலக்கிக் கொள்ளுங்கள். எனவே சகோதரர்கள் தங்களது உண்மையான உள்ளத்துடன் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உண்மையான நபியாக ஏற்றுக்கொண்டால் அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டால், பசுவின் காரணத்தால் ஏற்படுகின்ற வேற்றுமையையும் கூட நம்மிடையேயிருந்து நீக்கிவிடலாம். எதனை நாம் ஆகுமானது எனக் கருதுகின்றோமோ அதனை அவசியம் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்பது நம்மீது கட்டாயம் இல்லை. நாம் பலவற்றை ஆகுமானவையாகக் கருதுகின்றோம்; ஆனால் அவற்றை நாம் ஒருபோதும் உபயோகப் படுத்தியதில்லை. (இந்துக்களாகிய) இவர்களுடன் நல்ல முறையிலும், பரிவுடனும் நடந்து கொள்வது நமது மார்க்கத்தின் அறிவுறைகளில் ஒன்றாகும். இது இறைவனை ஒருவனாகவும், ஈடு இணையற்றவனாகவும் ஏற்றுக் கொள்வதை வலியுறுத்திக் கூறப்பட்டதைப் போன்ற ஒன்றாகும்.

ஆகவே ஒரு முக்கியமான, பயனுள்ள செயலுக்காக அவசியமற்றவற்றை விட்டுவிடுவது இறை சட்டத்திற்கு புறம்பானதல்ல. ஒன்றை ஆகுமானதாகக் கருதுவது என்பது வேறு; அதனை உபயோகிப்பது என்பது வெறொன்றாகும். மார்க்கம் என்பது, இறைவன் தடுத்தவற்றிலிருந்து





தவிர்ந்திருப்பதும், அவனது திருப்தியைப்பெறும் வழிகளின் பக்கம் ஓடுவதும் அவனது அனைத்து படைப்பினங்களுக்கு நன்மை செய்வதும், அனுதாபத்துடன் நடந்து கொள்வதும், உலகின் அனைத்து தூய நபிமார்களையும் இறை தூதர்களையும் தத்தமது காலத்தில் இறைவன் புறமிருந்து வந்த நபியாகவும் சீர்திருத்தவாதியாகவும் ஏற்பதும் அவர்களிடையே எவ்வித வேறுபாடு காட்டாமலிருப்பதும், ஒவ்வொரு மனிதனுடனும் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதும் ஆகும். இதுவே நமது மார்க்கத்தின் சுருக்கம் ஆகும்.

ஆனால் தேவையின்றி இறையச்சமில்லாமல் நமது மேன்மைவாய்ந்த நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தகாத வார்த்தைகளால் நினைவு கூறி அன்னார் மீது அசுத்தமான பழிகளை சுமத்தி, தகாத வார்த்தைகளை கூறுவதை விட்டுவிடாத மக்களுடன் நாம் எப்படி சமாதானம் செய்து கொள்ள முடியும்? நான் உண்மையாகவே உண்மையாகவே கூறுகின்றேன்; எங்களால் பூமியிலுள்ள கொடுமையான பாம்புகளுடனும், பாலைவனங்களிலுள்ள ஓநாய்களுடனும் சமாதானம் செய்து கொள்ள முடியும்; ஆனால் எங்கள் உயிரினும், தாய் தந்தையரினும் மேலான அன்பிற்குரிய நபி மீது அசுத்தமான தாக்குதல்களை நடத்துபவர்களிடம், நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது. இறைவன் எங்களுக்கு இஸ்லாத்திலேயே இறப்பை கொடுக்கட்டும். ஆனால் ஈமானை இழக்கக்கூடிய அப்படிப்பட்ட செயலை நாங்கள் செய்ய விரும்ப மாட்டோம்.

இப்போது நான் எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தையும் காரணமின்றி பழித்துரைக்க விரும்பவில்லை. அவ்வாறே எவருடைய மனதையும் புண்படுத்த நான் விரும்பவில்லை. மாறாக மிகவும் வருத்தத்துடனும் துயரத்துடனும் இவ்வாறு நான் கூற வேண்டியது ஏற்பட்டுள்ளது: இஸ்லாம் எத்தகைய தூய, சமாதானத்தை உருவாக்கும் மார்க்கம் என்றால், அது எந்தவொரு சமுதாயத்தின் தலைவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை; மேலும் திருக்குர்ஆன், சமுதாயங்களுக்கிடையே சமாதானத்தை வித்திட்டு, ஒவ்வொரு சமுதாயத்தின் நபியையும் ஏற்றுக்

கொண்ட கண்ணியத்திற்குரிய வேதமாகும். மேலும் திருக்குர்ஆன் உலகத்தைப்பற்றி 'முஸ்லிம்களே! நாங்கள் உலகின் எல்லா நபிமார்கள் மீதும் நம்பிக்கைக் கொள்கிறோம். அவர்களிடையே சிலரை ஏற்கவேண்டும்; சிலரை ஏற்கக் கூடாது என்ற வேற்றுமையை பாராட்டவில்லை' (3:85 காண்க) என்ற போதனையை நமக்கு வழங்கியது. முழு உலகிலும் இந்த குறிப்பிட்ட பெருமை திருக்குர்ஆனுக்கே கிடைத்திருக்கிறது. இவ்வாறான சமாதானத்தைக் கூறும் இறைவேதம் ஏதும் இருப்பின் அதன் பெயரைக் கூறுங்கள். திருக்குர்ஆன் இறைவனின் பொதுவான கருணையை எந்த வம்சத்துக்கு மட்டும் உரியதாக குறிப்பிட்டுக் கூறவில்லை. இஸ்ரவேல் சமுதாயத்தின் எத்தனை நபிமார்கள் இருந்தார்களோ! அது யாகூப் (அலை) அவர்களாக இருக்கட்டும், தாவூத் (அலை) அவர்களாக இருக்கட்டும், ஈஸா (அலை) அவர்களாக இருக்கட்டும் அனைவரின் நபித்துவத்தையும் ஏற்றுக் கொள்கிறது. மேலும் ஒவ்வொரு சமுதாயத்தின் நபியையும் - அவர் இந்தியாவில் தோன்றியவராக இருந்தாலும் பாரசீகத்தில் தோன்றியவராக இருந்தாலும் யாரையும் ஏமாற்றுபவர் என்றோ பொய்யரென்றோ கூறவில்லை. மாறாக ஒவ்வொரு சமுதாயத்திலும், ஊரிலும் நபி இருந்திருக்கிறார் என்று தெளிவாகக் கூறியுள்ளது. மேலும் அனைத்து சமுதாயங்களுக்கும் சமாதானத்திற்கு அடித்தளமிட்டுள்ளது. ஆனால் இப்படிப்பட்ட சமாதானத்தின் தூதரை (ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்.... அவர்களை) ஒவ்வொரு சமுதாயமும் ஏசுவதும், ஏளனமாகப் பார்ப்பதும் வருத்தத்திற்குரியதாகும்.

என் அன்பிற்குரிய நாட்டினரே! நான் உங்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பதற்காகவோ உங்களது மனதை துன்புறுத்துவதற்காகவோ இதனை உங்களிடம் கூறவில்லை. மாறாக, நான் மிகவும் நல்லெண்ணத்துடன் கூற விரும்புவது யாதெனில், எந்த சமுதாயம் மற்ற சமுதாயங்களின் நபிமார்களை தகாத வார்த்தைகளுடனும் அவப்பெயருடனும் நினைவு கூறும் தகாத முறையை தங்களது மார்க்கத்தில் கடைபிடிக்கும் பழக்கத்தை கொண்டிருக்கின்றனரோ அவர்கள் தம்மிடம் எவ்வித





சான்றும் இன்றி (பிற மார்க்கத்தில்) குறுக்கிடுவதனால் இறைவன் முன் பாவம் செய்தவர்களாவர். அவர்கள் மனித இனத்தில் வேற்றுமை மற்றும் இன்னும் சொல்லப்போனால் பகைமையின் விதையை விதைத்த பாவத்தையும் செய்தவர்களாவர். ஒருவர் இன்னொருவருடைய தந்தையை ஏசினால் அல்லது அவருடைய தாய் மீது பழிசுமத்தினால் அவர் தனது தந்தையின் கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்த தானே காரணமாக மாட்டாரா என்பதை நீங்கள் உங்கள் நெஞ்சில் கைவைத்து எனக்கு பதில் கூறுங்கள். மேலும் எவர் ஏசப்பட்டாரோ அவர், பதிலாக அதே போன்று (ஏசியவரை) ஏசினால், ஏசுவதில் உண்மையில் முதலில் ஏசியவர் தான் பதிலுக்கு ஏசப்படுவதற்கு காரணமாவார் என்றும், அத்தகைய நிலையில் (முதலில் ஏசிய) அவரே தனது தாய், தந்தையின் கண்ணியத்திற்கு எதிரியாவார் என்றும் கூறுவதும் பொருத்தமற்றதாக இருக்குமா என்ன?

இறைவன் திருக்குர்ஆனில் எந்த அளவுக்கு நமக்கு ஒழுக்கத்தின் முறையையும், நற்பண்புகளின் பாடத்தையும் கற்பித்திருக்கிறானென்றால், அவன் கூறுகிறான்: நீங்கள் இணை வைப்பவர்களது சிலைகளையும் கூட ஏசாதீர்கள். பிறகு அவர்கள் உங்களது இறைவனை ஏசுவார்கள். ஏனெனில் அவர்கள் உங்களது இறைவனை அறியாதவர்களாவர் (6:109 காண்க). இப்போது பாருங்கள்! இறைவனின் போதனைக்கேற்ப சிலைகள் ஒரு பொருட்டே இல்லை என்ற பிறகும் கூட இறைவன் முஸ்லிம்களுக்கு, சிலைகளை ஏசிவதிலிருந்தும் கூட தங்களது நாவினை அடக்கிக் கொள்ளுங்கள்; மேலும் மென்மையாக புரியவையுங்கள் என்ற நற்பண்பை கற்பித்திருக்கின்றான். அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இறைவனை ஏசிவிடக் கூடாது; அந்த ஏச்சுகளுக்கு நீங்கள் காரணமாகி விடக்கூடாது என்பதற்காக இவ்வாறு கட்டளையிட்டுள்ளான். எனவே இஸ்லாத்தின் மிக மகத்துவமிக்க நபியை ஏசுகின்ற இழிவான வார்த்தைகளால் அவர்களை நினைவு கூறுகின்ற, மேலும் அன்னாரின் கண்ணியம் மற்றும் நடத்தை மீது காட்டுமிராண்டித்தனமான முறைகளில் தாக்குதல் நடத்துகின்ற அம்மக்களின் நிலை என்ன? அன்னாரது பெயரைக் கூறினாலே இஸ்லாத்தின் மிகப் பெரிய மன்னரும்

அரியணையிலிருந்து இறங்கிடுவார்கள். மேலும் அன்னாரது கட்டளைகளுக்கு செவி சாய்ப்பார்கள். மேலும் தங்களைத் தாங்களே அற்பமான அடிமையாக எண்ணுவர். அத்தகைய தூய நபிக்குரிய இந்த கண்ணியம் இறைவன் புறமிருந்து கிடைத்ததில்லையா என்ன? இறைவனால் வழங்கப்பட்ட கண்ணியத்திற்கெதிராக ஏளனம் செய்வது என்பது இறைவனுடன் சண்டையிட விரும்புவோரின் செயலாகும். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எப்படிப்பட்ட இறை தூதரென்றால், அன்னாரின் ஆதரவிற்காகவும், கண்ணியத்தை வெளிப்படுத்துவதற்காகவும் இறைவன் உலகத்திற்கு மாபெரும் எடுத்துக்காட்டுகளை காட்டியிருக்கிறான். இருபது கோடி மக்களை முஹம்மதிய்ய அவையில் சிரம்பணிய வைத்திருக்கும் இச்செயல் இறைவனது கரத்தால் இல்லையா? ஒவ்வொரு நபியும் தமது நபித்துவத்தின் உண்மைக்கு சில ஆதாரங்களை கொண்டிருந்தார்கள். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவம் பற்றி எந்த அளவுக்கு இன்றுவரை ஆதாரங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ அவற்றிற்கு ஈடு இணையாக எந்த நபியிடமும் காணப்படுவதில்லை.

பூமி, குற்றம் மற்றும் பாவத்தினால் அசுத்தமாகிவிடும்போது, மற்றும் இறைவனின் தராசில் தீய செயல்களும், தீய நடத்தைகளும், வெட்கக்கேடுகளும் நற்செயல்களைவிட மிக அதிகமாகி விடும்போது இறைவனின் கருணையானது, அப்படிப்பட்ட நேரத்தில் தனது ஏதாவதொரு அடியாரை அனுப்பி பூமியிலுள்ள குழப்பங்களிலிருந்து சீர்திருத்தத்தை ஏற்படுத்த நாடுகிறது என்ற ஆதாரத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள இயலாது! நோயானது மருத்துவரை நாடுகிறது. மேலும் நீங்கள் இவ்விஷயத்தை புரிந்து கொள்ள எல்லோரையும் விட அதிக தகுதியுடையவர்களாய் இருக்கின்றீர்கள். ஏனெனில் உங்களுடைய கருத்தின்படி, வேதமானது பாவங்களின் புயல் வீசிய நேரத்தில் வரவில்லை. மாறாக பூமியில் எந்த பாவத்தின் வெள்ளமும் இல்லாதிருந்த போது வந்தது, ஆக, பாவத்தின் வெள்ளமானது ஒவ்வொரு தேசத்திலும் அதிவேகமாக பரவும்





நேரத்தில் ஒரு நபி தோன்றுவது உங்கள் பார்வையில் அனுமானத்திற்கு அப்பாற்பட்ட விஷயமா என்ன? (இல்லையே!)*

நமது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நபித்துவத்தின் அரியணையை தனது இருப்பால் கண்ணியப்படுத்திய அந்த காலம், உலகின் எந்த பகுதியும் தீய நடத்தை மற்றும் தீய கொள்கைகளால் காலியாகாத இருண்டகாலமாக இருந்தது என்ற வரலாற்று நிகழ்வை நீங்கள் அறியாதிருப்பீர்கள் என நான் நம்ப மாட்டேன். மேலும் பண்டிதர் தயானந்த் சரஸ்வதி ''ஸத்யார்த் பிரகாஷ்'' எனும் தமது நூலில் எழுதியிருப்பது போன்று இக்காலத்தில், இந்த ஆரிய மண்ணிலும் சிலை வணக்கம், இறை வணக்கத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. மேலும் வேத மதத்தில் மிகவும் சீர்குலைவு ஏற்பட்டுவிட்டட்து.

அவ்வாறே கிறித்தவ மார்க்கத்திற்கு அதிகமாக பேருதவி செய்பவராகவும் ஐரோப்பிய ஆங்கிலேயருமாக இருந்த ஃபண்டல் என்ற கிறித்தவ பாதிரி மீஸானுல் ஹக் எனும் தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்: "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் எல்லா சமுதாயங்களை விடவும் அதிகமாக கிறித்தவ சமுதாயம் சீர்கெட்டுப் போயிருந்தது. மேலும் கிறித்தவர்களின் தீய நடத்தைகள் கிறித்தவ மார்க்கத்தின் அசிங்கத்திற்கும் அவமானத்திற்கும் காரணமாக இருந்தன."

மேலும் திருக்குர்ஆனும், தான் இறக்கப்பட்டதன் அவசியத்திற்கு கீழ்வரும் வசனத்தை எடுத்துரைக்கின்றது:

காடும் சீர்கெட்டுவிட்டன; நதிகளும் சீர்கெட்டுவிட்டன. (திருக்குர்ஆன் 30: 42) இவ்வசனத்தின் பொருள் ஒவ்வொரு சமுதாயமும், அது மிருகத்தனமான நிலை கொண்டிருந்தாலும்

* *உங்கள் கருத்தின்படி, உலகில் பாவம் என்னும் வெள்ளம் தோன்றாத போதே வேதத்தின் தேவை இருந்திருக்கிறது என்றால் பாவம் எனும் புயல் காற்றுடன் வந்த வெள்ளப் பெருக்கினைக் கொண்ட இக்காலத்தில் ஒரு இறைதூதர் தோன்ற வேண்டியது கட்டாயம் என்பதை உங்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.*

அல்லது அறிவுடைமையானது என வாதிட்டாலும் அவை சீர்கேட்டிலேயே இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்திய மக்கள், அவர்கள் கிழக்கத்தியர்களாயிருப்பினும், மேற்கத்தியர்களாயிருப்பினும்; ஆரிய மண்வாழ் மக்களாயிருப்பினும், அரேபிய பாலைவனத்தில் வாழ்பவர்களாக இருப்பினும் தீவுகளில் தமது வசிப்பிடங்களைக் கொண்டவர்களாயிருப்பினும் அவர்கள் அனைவரும் சீர் கெட்டிருந்தார்கள்; இறைவனுடன் தூய தொடர்புடைய எவரும் இல்லை; தீய செயல்களை செய்பவர்கள் பூமியை அசுத்தப் படுத்திவிட்டார்கள் என்பது எல்லா சாட்சியங்களின் மூலமாக நிரூபணமாகியிருக்கின்ற நிலையில், இப்படிப்பட்ட இருண்ட காலகட்டம் நிச்சயமாக ஒரு மகத்தான நபி வரவேண்டிய அதே காலகட்டம்தான் என்று பகுத்தறிவும் ஆமோதிக்க முடியும் என்பதை ஓர் அறிவாளி புரிந்து கொள்ள முடியாதா?

இந்த நபி உலகிற்கு வந்து என்ன சீர்திருத்தம் செய்தார் என்ற கேள்வி எழுகிறது. அந்த கேள்விக்கான பதிலை எவ்வாறு ஒரு முஸ்லிம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சீர்திருத்தம் பற்றி கூற முடியுமோ அவ்வாறு நான் எந்தவொரு கிறித்தவரும், யூதரும், ஆரியரும் கொடுக்க முடியாத தெளிவான ஆதாரப்பூர்வமான பதிலை வலுவாக எடுத்துக் கூறுகின்றேன்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முதல் நோக்கம், அரேபியாவின் சீர்திருத்தமாக இருந்தது. மேலும் அக்காலத்தில் அரபு நாடு எத்தகைய நிலையில் இருந்ததென்றால் அவர்களை மனிதர்கள் எனக் கூறுவதும் கடினமாக இருந்தது. அவர்களிடம் இல்லாத தீமை எது இருந்தது? மேலும் அவர்களிடம் இல்லாத இணைவைத்தல் எது இருந்தது? திருடுவதும், கொள்ளையடிப்பதும் அவர்களது தொழிலாக இருந்தது, மேலும் காரணமின்றி கொலை செய்வதென்பது, ஒரு எறும்பினை காலால் நசுக்கிவிடுவது போன்று ஒரு சாதாரண செயலாக அவர்களிடம் காணப்பட்டது. குழந்தைகளை கொன்று





அவர்களது செல்வத்தை விழுங்கிக்கொண்டிருந்தனர். பெண்குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்தனர். விபச்சாரத்தை பெருமைப்படுத்திக் கொண்டிருந்தனர். மேலும் வெளிப்படையாக தங்களது கவிதைகளில் அந்த அசுத்தமான விஷயங்களை கூறி வந்தனர். மது அருந்துவது அச்சமுதாயத்தில் எந்த அளவுக்கு பெருகியிருந்ததெனில், எந்தவொரு வீடும் மதுவை விட்டும் காலியாக இருந்ததில்லை. மேலும் சூதாடுவதில் எல்லா நாடுகளை விடவும் முன்னேறியவர்களாக இருந்தனர். மிருகங்களைப் போன்று மானமின்றியும், பாம்புகள் மற்றும் ஓநாய்களைப் போன்று வெட்கமின்றியும் இருந்தனர்.

பிறகு எம்பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அம்மக்களின் சீர்திருத்தத்திற்காக நின்று தமது ஆழ்ந்த கவனத்தால் அவர்களது மனதை தூய்மைப்படுத்த விரும்பிய போது, அவர்களிடையே சிறிது நாட்களிலேயே எத்தகைய மாறுதல்கள் உருவாயின என்றால், அவர்கள் மிருகத்தனமான நிலையிலிருந்து மனிதனாக ஆகி, பிறகு மனிதனிலிருந்து நாகரிகமுள்ள மனிதனாகி, நாகரிகமுள்ள மனிதனிலிருந்து இறைவனைச் சார்ந்த மனிதனாகி இறுதியில் இறைவனின் அன்பில் மூழ்கி அவர்கள் ஒரு உணர்ச்சியற்ற உறுப்பைப் போன்று ஒவ்வொரு துக்கத்தையும் பொறுத்துக் கொண்டனர். அவர்கள் பல்வேறு விதமான துன்பங்களின் மூலமாக கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர். மேலும் அவர்கள் இரக்கமின்றி சவுக்கால் அடிக்கப்பட்டனர். மேலும் கொதிக்கின்ற மணலில் கிடத்தப்பட்டனர். மேலும் சிறைபிடிக்கப்பட்டனர். மேலும் பசியுள்ளவர்களாகவும் தாகமுடையவர்களாகவும் வைக்கப்பட்டு அழிவு வரை கொண்டு செல்லப் பட்டனர். ஆயினும் அவர்கள் ஒவ்வொரு துன்பத்தின் போதும் முன் நோக்கியே அடி வைத்தனர். மேலும் அவர்களில் பலரது பிள்ளைகள் அவர்களின் கண் முன்னரே கொல்லப்பட்டனர். மேலும் அவர்களில் பலர், பிள்ளைகளுக்கு முன்பே தூக்கிலிடப்பட்டனர். அவர்கள் எத்தகைய உண்மையுடன் இறைவழியில் உயிர் நீத்தார்களோ அதனை எண்ணி அழுகை வருகிறது. அவர்களது உள்ளங்களில் ஏற்பட்ட இந்த மாறுதல்கள்

இறைவனின் ஆதிக்கம் மற்றும் அவனது நபியின் அன்பார்ந்த கவனத்தின் தாக்கமாக இல்லை என்றால், பின்னர் அவர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்து வந்தது எது? மேலும் வழக்கத்திற்கு மாறான ஒரு மாறுதலை உருவாக்கி அவர்களை, ஒரு ஆதரவற்றவராகவும், ஏழ்மையானவராகவும், தேவையுடையவ ராகவும் இருந்த நிலையில், மக்காவின் தெருக்களில் தன்னந் தனியாக சுற்றிக் கொண்டிருந்த ஒரு மனிதரது வாசலில் விழுமாறு தூண்டியது எது? இறுதியில் ஏதோ ஒரு ஆன்மீக சக்திதான் அவர்களை ஒரு கீழான நிலையிலிருந்து எழுப்பி, உயர்வான இடத்திற்கு எடுத்துச் சென்றது. மேலும் வினோதமான விஷயம் யாதெனில் அவர்களில் பெரும்பாலார், அவர்கள் நிராகரிப்பின் நிலையில் இருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயிருக்கு எதிரியாகவும் அவர்களது இரத்தத்தைக் குடிக்கத் தயாராகவும் இருந்தனர். ஓர் ஏழையான, தேவையுடைய, தனித்த, ஆதரவற்ற மனிதர் அவர்களது உள்ளங்களை எல்லாவிதமான பொறாமைகளி லிருந்தும் தூய்மைப்படுத்தி எவ்வாறு தன்வசம் ஈர்த்துக் கொண்டார்? தன்வசம் எதுவரையெனில் அவர்கள் ஆடம்பர உடைகளை எறிந்து விட்டு கோணியினை அணிந்தவாறு தொண்டு செய்ய முன்வந்தனர். இதைவிடப் பெரிய அற்புதமாக நான் வேறு எதையும் கருதவில்லை.

சில அறிவீனர்கள் இஸ்லாத்தின் மீது ஜிஹாதிற்கான குற்றம் சுமத்துகின்றனர். மேலும் இவ்வனைத்து மக்களும் வலுக் கட்டாயமாக வாளால் முஸ்லிமாக்கப்பட்டனர் எனக் கூறுகின்றனர். அந்தோ பரிதாபம்! அவர்கள் தங்களது அநீதியிலும் உண்மையை மறைப்பதிலும் எல்லையைக் கடந்து விட்டதில் ஆயிரம் பரிதாபங்கள்!! அந்தோ பரிதாபம்! அவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? அவர்கள் வேண்டுமென்றே சரியான நிகழ்வுகளிலிருந்து முகம் திருப்பிக் கொள்கின்றனர். நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், மன்னராட்சியின் வலிமையையும் ஆற்றலையும் தன்னிடம் கொண்டிருந்ததனால், மக்கள் உயிரைக் காத்துக் கொள்வதற்காக அவர்களது கொடியின் கீழ் வந்துவிட்டனர் என கருதப்படுவதற்கு, அவர் ஒன்றும்





அரேபிய நாட்டில் ஒரு மன்னரின் உருவில் வருகை தரவில்லையே!

ஆகவே, உங்களுக்காக தனது ஏழ்மையிலும், ஆதரவற்ற நிலையிலும், தனித்த நிலையிலும் இறைவனின் ஏகத்துவத்தைப்பற்றியும், தனது நபித்துவத்தைப் பற்றியும் பிரகடனம் செய்ய ஆரம்பித்த அந்த நேரத்தில் எந்த வாளின் அச்சத்தினால் மக்கள் அன்னார் மீது நம்பிக்கை கொண்டார்கள்? என்பதே கேள்வியாகும். அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்றால் பிறகு கட்டாயப்படுத்துவதற்காக எந்த மன்னரிடம் ஏதாவது ஒரு படை கேட்கப்பட்டது? மேலும் உதவிக் கேட்கப்பட்டது? உண்மையை தேடுபவர்களே! இவ்வனைத்து விஷயங்களும், இஸ்லாத்தின் கடும் எதிரிகளின் இட்டுக்கட்டுகளாகும் என்பதனை நீங்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்ளுங்கள்.

வரலாற்றைப் பாருங்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த சில தினங்களிலேயே தந்தையை இழந்த அதே அநாதை சிறுவர் தான். மேலும் தாய் சில மாத குழந்தையை விட்டு விட்டு இறந்து விட்டார். அப்பொழுது இறைவனது உதவிக்கரம் பெற்றிருந்த அச்சிறுவர் எவ்வித ஆதரவுமின்றி இறைவனின் பாதுகாப்பில் வளர்ந்து வந்தார். மேலும் அந்த துயரமான அநாதையாக இருந்த நாட்களில் சிலரது ஆடுகளையும் மேய்த்தார். மேலும் இறைவனைத் தவிர வேறு எந்த பாதுகாப்பாளனும் இருக்கவில்லை. மேலும் இருபத்தைந்து வயது ஆகியும் எந்த சிற்றப்பாவும் அவருக்கு தனது பெண்ணைத் தரவில்லை. ஏனெனில் வெளிப்படையாகத் தெரிந்ததைப் போன்று, அன்னார் குடும்பச் செலவுகளை தாங்கிக் கொள்ள தகுதியற்றவராகத் தெரிந்தார். மேலும் படிப்பறிவற்றவராகவே இருந்தார். மேலும் எந்த வேலையையும், தொழிலையும் அறியாதவராக இருந்தார். பிறகு அன்னார் நாற்பது வயதினை அடைந்த போது, ஒருமுறை அவரது மனம் இறைவன் பக்கம் ஈர்க்கப்பட்டது. மக்காவிலிருந்து சில மைல்கள் தூரத்திலிருந்த ''ஹிரா'' என்ற பெயரைக் கொண்ட குகையில் அன்னார் தனியாக சென்று, குகைக்குள்

மறைந்திருந்து, தனது இறைவனை நினைவு கூர்ந்தார்கள். ஒரு நாள் அதே குகையில் அன்னார் மறைமுகமாக வணங்கிக் கொண்டிருந்த போது இறைவன் அவர் முன் வெளிப்பட்டான். மேலும் அன்னாருக்கு உலகம் இறைவனின் வழியை விட்டுவிட்டது; மேலும் பூமி பாவத்தால் அழுக்காகி விட்டது. எனவே நான் உம்மை எனது தூதராக அனுப்புகிறேன். இப்போது நீர் மற்ற மக்களை அவர்கள் தண்டனைக்கு முன்னதாகவே இறைவன் பக்கம் திரும்பிடுமாறு எச்சரிப்பீராக என்று கட்டளை இறங்கியது. இக் கட்டளையை செவியுற்றதும் நான் ஒரு உம்மி அதாவது படிப்பறிவற்றவன் என்று அஞ்சினார்கள். மேலும் தான் படிக்கத் தெரியாதவன் என்றும் கூறினார்கள். அப்போது இறைவன் அன்னாரது இதயத்தில் அனைத்து ஆன்மீக ஞானங்களையும் நிரப்பிவிட்டான். மேலும் அன்னாரது இதயத்தை ஒளியூட்டினான். அன்னாரது பரிசுத்தத்தின் ஆற்றலின் தாக்கத்தினால் ஏழை, எளியோர்கள் அவர்களுக்குக் கீழ்படியும் வட்டத்திற்குள் வர ஆரம்பித்துவிட்டனர்.

மேலும் பெரிய பெரிய மனிதர்கள் அன்னாருடன் பகைமை பாராட்டுவதில் கடுமையாக முயன்றனர். எதுவரையெனில், இறுதியில் அன்னாரை கொலை செய்ய நாடினர். மேலும் பல ஆண்கள் மற்றும் பல பெண்கள் பெரும் வேதனையுடன் கொலை செய்யப் பட்டார்கள். இறுதி தாக்குதலாக எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கொல்வதற்காக அன்னாரின் வீட்டை முற்றுகையிட்டனர். ஆனால் எவரை இறைவன் காப்பாற்றுகின்றானோ அவரை யார் கொல்வது? இறைவன் தனது வஹியின் மூலம், நீர் இந் நகரத்தை விட்டு வெளியேறிவிடுவீராக, நான் ஒவ்வொரு அடியிலும் உம்முடன் இருப்பேன் என்று அறிவித்தான். எனவே அன்னார் மக்கா நகரத்திலிருந்து அபூபக்கர் (ரலி) அவர்களுடன் வெளியேறினார்கள். மேலும் மூன்று இரவுகள் ''ஸவ்ர்'' குகையில் மறைந்திருந்தார்கள். எதிரிகளும் பின் தொடர்ந்து தடயங்களின் மூலம் கண்டிபிடிப்பவர் மூலமாக அந்த குகை வரை சென்றடைந்தனர். அவர், குகை வரை கால் தடயங்களின் அடையாளத்தை கண்டுபிடித்து விட்டார். இதற்கு மேல்





காலடித்தடம் இல்லை. ஒருவேளை இதற்கு மேல் சென்றிருந்தால் பின்பு வானத்திற்குத்தான் ஏறிச் சென்றிருப்பார் என்றார். ஆனால் இறைவனின் வல்லமையின் அற்புதங்களை எவரால் வரையறுக்க முடியும். இறைவன் ஒரே இரவில் தனது வல்லமையை காட்டினான். சிலந்தி தனது வலையினால் குகையின் எல்லா முகப்புகளையும் மூடிவிட்டது. மேலும் ஒரு பெண் புறா குகையின் முகப்பில் கூடுகட்டி முட்டையிட்டது. தடயத்தை பின்பற்றி வந்தவன் குகைக்குள் செல்லுமாறு கூறியபோது ஒரு வயது முதிர்ந்தவர், இந்த தடயம் அறிபவன் பைத்தியக்காரனாகிவிட்டான். நான் இந்த வலையினை குகையின் முகப்பில் முஹம்மது (ஸல்) பிறப்பதற்கு முன்பிருந்தே பார்த்து வருகிறேன் என்றார். அதனைக் கேட்டு அனைவரும் பரவிச் சென்றுவிட்டனர். மேலும் குகை பற்றிய சிந்தனையை விட்டு விட்டனர்.

அதற்குப் பிறகு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மறைந்தவாறே மதீனா சென்றடைந்தார்கள். மேலும் மதீனாவின் பெரும்பாலான மக்கள் அன்னாரை ஏற்றுக் கொண்டனர். இதனால் மக்கத்தினரின் கோபம் பெருகியது. மேலும் நமது இரை நம்கையிலிருந்து சென்றுவிட்டதே என வருந்தினர். பிறகு என்ன? இரவு பகலாக எவ்வாறு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொல்வது என்ற திட்டங்கள் தீட்டுவதிலேயே ஈடுபட்டிருந்தனர். மேலும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டிருந்த மக்கத்தினரின் சிறியதொரு கூட்டமும் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து பல்வேறு நாடுகளுக்கு சென்றுவிட்டனர். சிலர் ஹப்ஷாவின் மன்னரிடம் அடைக்கலம் புகுந்தனர். மேலும் சிலர் மக்காவிலேயே இருந்தார்கள். ஏனெனில் பயணம் செய்வதற்கான பயணப் பொருட்கள் அவர்களிடம் இருந்ததில்லை. மேலும் அவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் எந்த அளவுக்கு இரவு பகலாக மன்றாடிக் கொண்டிருந்தனர் என திருக்குர்ஆனில் வந்துள்ளது.

மேலும் குரைஷிய நிராகரிப்பாளர்களின் அநீதி எல்லையைக் கடந்தது. அவர்கள் ஏழைப் பெண்களையும், அநாதை சிறுவர்களையும் கொலை செய்யத் தொடங்கினர். மேலும் சில பெண்கள் எந்த அளவு மனிதாபிமானமின்றி கொல்லப் பட்டார்கள் என்றால், அவர்களது இரு கால்களையும் இரண்டு கயிறுகளால் கட்டி இரண்டு ஒட்டகங்களுடன் இறுக்கமாக கட்டிவிட்டு பிறகு அந்த ஒட்டகங்களை இரு வேறு திசைகளில் ஓட விட்டனர். இவ்வாறு அந்த பெண்கள் இரு துண்டுகளாகி இறந்தனர்.

இரக்கமற்ற நிராகரிப்பாளர்களின் அநீதி இந்த அளவுக்கு சென்ற போது, இறுதியில் தன் அடியார்கள் மீது கருணை பொழியும் இறைவன் தனது தூதரிடம், அநீதியிழைக்கப்பட்ட வர்களின் மன்றாடல் என்னை அடைந்து விட்டது. நீங்களும் அவர்களோடு போட்டியிடுமாறு இன்று நான் அனுமதியளிக் கிறேன். குற்றமற்ற மக்கள் மீது வாளை ஏந்துபவர்கள் வாளாலேயே அழிக்கப்படுவர் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஆயினும் நீங்கள் எல்லை மீறி விடவேண்டாம். இறைவன் எல்லை மீறுபவர்களை நேசிப்பதில்லை என்று தனது வஹியை இறக்கினான்.

இதுதான் பெரும் அநீதியுடன், தீய கோணங்களில் எடுத்துக் கூறப்படும் இஸ்லாமிய ஜிஹாதின் உண்மை நிலையாகும். சந்தேகமின்றி இறைவன் சகிப்புத் தன்மை கொண்டவன்தான். ஆனால் ஒரு சமுதாயம் தீமையின் எல்லையினைக் கடந்து விடும்போது அவன் அநீதி இழைப்பவரை தண்டனையின்றி விட்டு விடுவதில்லை. மேலும் அவனே அவர்களது அழிவிற்கான வழி வகையை உருவாக்கி விடுகின்றான். நமது எதிரிகள் எங்கிருந்து, யாரிடமிருந்து இஸ்லாம் வாளின் வலிமையால் பரவியது என்று செவியுற்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை! இறைவனோ திருக்குர்ஆனில் கூறுகிறான்:

இஸ்லாமிய மார்க்கத்தில் வற்புறுத்தல் இல்லை.(2: 257) பிறகு யார் கட்டாயப்படுத்தும் கட்டளையை இட்டது? மேலும் கட்டாயத்திற்கான எந்த வழி இருந்தது? வலுக்கட்டாயமாக





முஸ்லிமாக்கப்படுபவர்கள் எவ்வித கூலியுமின்றி, இருநூறு, முன்னூறு ஆட்களைக் கொண்டிருந்தும் ஆயிரக்கணக்கில் உள்ளவர்களை எதிர்த்துப் போட்டியிடும் அளவுக்கு அதே உண்மையும் ஈமானும் இருக்குமா? மேலும் ஆயிரமாக பெருகிய போது இலட்சக்கணக்கான எதிரிகளை தோற்கடித்திருப்பார்களா? மேலும் மார்க்கத்தை எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற ஆடுகளைப் போன்று தலைகளை வெட்டிக் கொள்ள முற்பட்டிருப்பார்களா?

மேலும் இஸ்லாத்தின் உண்மைக்கு தனது இரத்தத்தினால் முத்திரைகளை இட்டிருப்பார்களா? மேலும் இறைவனின் ஏகத்துவத்தை பரப்ப ஏழ்மையான நிலையில் ஆப்பிரிக்காவின் பாலைவனம் வரை சென்று அந்நாட்டில் இஸ்லாத்தைப் பரப்புமளவிற்கு நேசமுடையவர்களாக இருந்திருப்பார்களா? பிறகு எல்லாவித கடினங்களையும் தாங்கிக் கொண்டு போரின் முறையில் அல்ல; மாறாக எளிமையைக் கடைபிடித்தே சீனா வரை சென்றடைந்திருப்பார்களா? மேலும் அந்நாட்டில் சென்று இஸ்லாத்தின் பக்கம் அழைத்திருப்பார்களா? அதன் விளைவாக, அவர்களது அருளுக்குரிய அறிவுரைகளால் பல கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இப்பூமியில் பிறந்திருப்பார்களா? பிறகு கோணியை அணிந்த வறியோர்களாக இந்தியா வந்து ஆரிய மண்ணின் பெரும் பகுதியை இஸ்லாத்தை மனதார ஏற்க வைத்திருப்பார்களா? மேலும் ஐரோப்பாவின் எல்லைகள் வரை ‘லாயிலாஹ இல்லல்லாஹ்’ என்ற குரலை எட்டவைத்திருப் பார்களா? இச்செயலானது மனதளவில் காஃபிர்களாகவும், நாவளவில் மூமின்களாகவும் இருந்து வலுக்கட்டாயமாக முஸ்லிம்களாக்கப்பட்ட அம்மக்களுடையதா? என நீங்கள் ஈமானுடன் கூறுங்கள்.

இல்லை; மாறாக, இது எவர்களின் உள்ளங்கள் ஈமானின் ஒளியால் நிரம்பி விடுகின்றனவோ, எவர்களின் உள்ளங்களில் இறைவன் மட்டுமே இருப்பானோ அம் மக்களின் செயலாகும்!

பிறகு நாம் இஸ்லாத்தின் போதனைகளின் பக்கம் திரும்புவோம். இஸ்லாத்தின் மிகப் பெரிய நோக்கம், பூமியில்

இறைவனின் ஏகத்துவம் மற்றும் வல்லமையை நிலைநாட்டி, இணைவைத்தலை முழுவதுமாக ஒழிப்பதும், பல்வேறு விதமான பிரிவினர்கள் அனைவரையும் ஒரே கலிமாவின் மீது நிலை நிறுத்தி அவர்களை ஒரே சமுதயமாக்குவதும் ஆகும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். மேலும் உலகில் எத்தனை சமுதாயங்கள், எத்தனை நபிமார்கள், இறைதூதர்கள் வந்திருக்கின்றனரோ அவர்களது பார்வை தனது சமுதாயம் மற்றும் தனது நாடு என்ற அளவிற்கே எல்லைக்குட்பட்டதாக இருந்தது. மேலும் அவர்கள் சில நற்பண்புகளை கற்பித்திருந்தாலும் அந்த நற்பண்புகளைக் கொண்ட போதனைகளால் தனது சமுதாயத்திற்கு அந்த நற்பண்புகளினால் பயன் பெறவைக்க வேண்டும் என்ற நோக்கத்தை தவிர வேறொன்றும் இருந்ததில்லை.

ஹஸ்ரத் ஈசா (அலை) தெள்ளத் தெளிவாக ‘‘என்னுடைய போதனை இஸ்ரவேலர்களுக்கே உரியது என்று கூறிவிட்டார்கள். (மத்தேயு 15:24 பார்க்க) மேலும் இஸ்ரவேல் சமுதாயத்தை சார்ந்திராத ஒரு பெண் மிகவும் பணிவுடன் அவர்களிடம் நேர்வழி கேட்டார். அதற்கு இயேசு அவர்கள் மறுத்துவிட்டார்கள். பிறகு அந்த ஏழைப் பெண்மணி தன்னை ஒரு நாயுடன் ஒப்பிட்டுக் கூறி மறுபடியும் நேர்வழி கேட்டார். அதற்கும் ‘நான் இஸ்ரவேல் ஆடுகளுக்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்’ என்ற அதே பதில் தான் அவருக்குக் கிடைத்தது. இறுதியில் அவள் அமைதியாகிவிட்டாள்.

ஆனால் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ‘‘தான் அரேபியர்களுக்காக மட்டுமே அனுப்பப்பட்டுள்ளேன்’’ என்று எங்கும் கூறவில்லை. மாறாக திருக்குர்ஆனில்: நான் அகில உலகத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன் என்று நீர் மக்களிடம் கூறுவீராக என்றிருக்கிறது. (திருக்குர்ஆன்7:159) ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அந்த பெண்ணிற்கு தெளிவான பதிலை கூறியதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் எந்தவொரு பாவமும் இருக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மாறாக, பொதுவான நேர்வழிக்கான நேரம் அப்பொழுது வந்திருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை)





அவர்களுக்கு, ‘‘நீர் இஸ்ரவேலர்களுக்காகவே குறிப்பாக அனுப்பப்பட்டுள்ளீர், மற்றவர்களோடு உமக்கு எந்த நோக்கமும் இல்லை என்ற கட்டளையே இறைவனிடமிருந்து வந்திருந்தது. எனவே நான் கூறியது போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நல்லொழுக்கத்தின் போதனையும் கூட யூதர்களுக்காக மட்டுமே எல்லைக்குட்பட்டதாக இருந்தது. தௌராத்தில் பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், மூக்குக்கு மூக்கு பழிவாங்கும் கட்டளைகள் இருந்தன. மேலும் அப்போதனையினால் யூதர்களிடையே நீதியை நிலை நாட்டவும் நீதியின்மை மற்றும் வரம்பு மீறுதலிலிருந்து தடுப்பதுமே நோக்கமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் நானூறு ஆண்டுகளாக அடிமைத்தனத்திலிருந்த காரணத்தால் அவர்களிடையே அநீதி மற்றும் தாழ்வு மனப்பான்மை கொண்ட பண்புகள் அதிகமாக உருவாகி விட்டிருந்தன. எனவே பழிவாங்குதல் மற்றும் பதிலடி கொடுத்தல் ஆகியவற்றால் அவர்களது இயல்பில் ஒரு கடுமை இருந்தது. அதனை விலக்குவதற்காக ஒரு நல்லொழுக்க போதனையை வலுவாக எடுத்துரைக்க இறைவனின் ஞானம் விரும்பியது. எனவே அந்த நல்லொழுக்க போதனைதான் இஞ்சீல் ஆகும். அது யூதர்களுக்கு மட்டுமாகும்; முழு உலகத்திற்கும் அல்ல. ஏனெனில் மற்ற சமுதாயங்கள் பற்றிய எந்த நோக்கமும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இருந்ததில்லை.

ஆயினும் உண்மை என்னவெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எடுத்து வைத்த போதனை உலகின் பொதுவான அனுதாபத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்ற ஒரு குறைப்பாடு மட்டுமின்றி, தௌராத் எவ்வாறு கடுமை மற்றும் பழிவாங்கும் போதனையில் எல்லை மீறுதலின் பக்கம் குனிந்து விட்டதோ அவ்வாறே இஞ்சீல், கண்டும் காணாதிருத்தல் மற்றும் மன்னித்தல் பற்றிய போதனையில் பின்தங்கி குனிந்து விட்டது என்ற குறைபாடும் உள்ளது.

மேலும் இவ்விரு வேதங்களும் மனிதன் என்ற மரத்தின் அனைத்து கிளைகளையும் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. மாறாக அம்மரத்தின் ஒரு கிளையை தௌராத்

முன்வைக்கிறதென்றால் அதன் இரண்டாவது கிளை இன்ஜீலின் கையில் இருக்கிறது. மேலும் இரு போதனைகளும் நீதியிலிருந்து தவறிவிட்டன. ஏனெனில் எவ்வாறு எல்லா நேரமும், எல்லா சந்தர்ப்பத்திலும் பழி வாங்குவது மற்றும் தண்டனை அளிப்பது பொருத்தமற்றதாக இருக்கின்றதோ அவ்வாறே எல்லா நேரமும், எல்லா சந்தர்ப்பத்திலும் கண்டும் காணாதிருப்பதும் மன்னிப்பதும் மனிதனுடைய நல்லொழுக்கப் பயிற்சிக்குப் பொருத்தமானவற்றிற்கு முற்றிலும் எதிரானதாகும். இதன் காரணத்தினால் தான் திருக்குர்ஆன் இவ்விரு போதனைகளையும் ரத்து செய்துவிட்டு இவ்வாறு கூறுகிறது:

அதாவது தௌராத்தின் போதனையைப் போன்று, எந்த அளவு தீமை செய்யப்பட்டதோ அத்தீமைக்கு அந்த அளவே பதிலடி. ஆயினும் இன்ஜீலின் போதனையைப் போன்று யாரும் மன்னித்து விட்டால், மேலும் அந்த மன்னிப்பினால் ஏதும் நல்ல விளைவு ஏற்படும்போது, எவர் மன்னிக்கப்பட்டாரோ அந்த மன்னிப்பினால் ஏதும் சீர்திருத்தம் அவருக்கு ஏற்படும்போது அந்நிலையில் அந்த மன்னிப்பு அழகியதும், ஆகுமானதும் ஆகும். மற்றபடி, தௌராத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுதான் சட்டமாகும். (திருக்குர்ஆன் 42: 41 காண்க)